வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 25.06.2024 செவ்வாய்க்கிழமை | இதழ் : 177 | பக்கங்கள் : 12

# தமிழர் அபிலாசைகளை சர்வதேச சமூகத்தின் பங்களிப்புடன் எட்டுவதற்கு பொதுவேட்பாளர்!

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி முடிவு

❖ சமூக அமைப்புகளுடன் 29ஆம் திகதி பேச்சு

வவுனியா, ஜூன் 25

**தமிழ் மக்களின் அபிலாசைகளுடனான அரசியல் தீர்வை சர்வதேச சமூகத்தின் ஆரோக் கியமான - ஆக்கபூர்வமான பங்களிப்புடன் எட்டும் நோக்கத்தோடும் - தமிழ் மக்களின் தனித்துவம், வரலாற்று ரீதியான வாழ்விடத்தை உறுதிப்படுத்தும் விதத்திலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது என்று ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) பங்காளி கட்சிகள்ஒருமனதாக தீர்மா னித்துள்ளன.**

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று வவுனி யாவில் தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக் கப்பட்டது.

அத்துடன், தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதற்காக முன் னின்று செயல்படும் சமூக அமைப்புகளுடன் எதிர் வரும் 29ஆம் திகதி ஜன நாயக தமிழ்த் தேசியக் கூட்டணி கலந்துரையா டவுள்ளது.

இதன்போது, என்ன

11



## எமது அரசாங்கம் நிச்சயம் அமையும்

### மகிந்த ராஜபக்ஷ உறுதி

கொழும்பு, ஜூன் 25

நாங்கள் நிச்சயமாக அர சாங்கத்தை அமைப்போம் என்று முன்னாள் ஜனாதிபதி யும் பொதுஜன பெரமுன கட்சியின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார்.

கம்பளையில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த சந்திப்பில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வுடன் இணைந்து செயல்படுவது தொடர்பில் எழுப் பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், "இந்த முடிவு கட்சியால் உரிய நேரத்தில் எடுக்கப்படும்.

11

## என்னைக் கொல்லாமல் கொல்கிறார் கர்தினால்

### மைத்திரி மனவேதனை



கண்டி, ஜூன் 25

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் சில அரசியல்வாதிகள் இணைந்து என்னை கொல்லாமல் கொல்கின்றனர்- இவ் வாறு மனம் வருந்தியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அத்துடன், நான் குண்டுத் தாக்குதல் நடத்தினேனா? ஆயுதங்களை தயாரித்தேனா?

11

## கல்முனை வடக்கு விவகாரம் வீதியை மறித்து போராட்டம்!



கல்முனை, ஜூன் 25

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு அதன் அதிகாரங்கள் முழுமையாக வழங்கப் பட வேண்டும் - இது விடயத்தில் விரைவான தீர்வு வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று அந்தப் பிரதேச மக்கள் மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

11

## ஜனாதிபதி நாளை உரை

கொழும்பு, ஜூன் 25

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு நாளை புதன் கிழமை இரவு 8 மணிக்கு விசேட உரையாற்றவுள் ளார்.

இந்த உரையில், நாட்டின் பொருளாதார சவால்கள் மற்றும் வெளி நாட்டு கடன் மறுசீர மைப்பு முயற்சிகள் தொடர்பில் விளக்க மளிப்பார். அத்துடன், சமகால அரசியல் தொடர்பாகவும் அவர் பேசுவார் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## 4 உணவு கையாளும் நிலையங்களுக்கு சீல்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம் மாநகர, நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவில் 4 உணவு கையாளும் நிலையங் களை "சீல்" வைத்து மூடுவதற்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடந்த 19ஆம் திகதி பொதுச் சுகாதார பரிசோதகர் ரி. கிருபன் தலைமையிலான குழுவினர் சோதனை

11

## ரூ. 40 கோடி பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் மீட்பு

கொழும்பு, ஜூன் 25

பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட பொதியில் 4 கிலோ ஐஸ் போதைப்பொருள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

11



## மன்னாரில் கோர விபத்து இளம் குடும்பஸ்தர் பலி!

மன்னார், ஜூன் 25

பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

மன்னார் - முருங்கன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரயில் கடவை பகுதியில் நேற்று திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

மன்னாரிலிருந்து சென்ற தென் பகுதியைச் சேர்ந்த தனியார் பேருந்தும் வவுனியாவிலிருந்து முருங்கன் வீதி நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் மன்னார் நானாட்டான் சாளம்பன் நாக செட்டி கிராமத்தைச் சேர்ந்த சுந்தரலிங்கம் தீபன் (வயது - 35) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தார்.

11

## சர்வதேச நீதிமன்றில் இலங்கை விவகாரம்

### பிரிட்டனின் தொழில்கட்சி உறுதி

லண்டன், ஜூன் 25

இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன் றத்துக்கு பாரப்படுத்த தயார் என்று பிரிட்டனின் தொழில்கட்சி உறுதிமொழி வழங்கியுள்ளது.

ஜூலை 4 ஆம் திகதி பிரிட்டனில்

11

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

இந்த வாரத்தின் எஞ்சிய சில நாட்கள் மிகவும் முக்கியமான நாட்களாகக் கடந்து செல்லவிருக்கின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் முக்கிய அறிக்கை ஒன்று இன்று வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகளுடன் நடந்துவந்த கடன் மறுசீரமைப்பு தொடர்பான பேச்சுகள் தொடர்பாக வெளியாகவுள்ள அந்த அறிக்கை இலங்கைக்கு மகிழ்ச்சியளிக்கும் வகையில் அமைந்திருக்கும் என்றும் அந்த அறிக்கைக்கு சர்வதேச ரீதியில் ஊடகங்களில் கிடைக்கும் முக்கியத்துவம் நாட்டுக்கு ஒரு புதிய வெளிச்சத்தை வழங்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த மகிழ்ச்சியான செய்தியுடன் நாளையதினம் நாட்டு மக்களுக்கு உரையாற்றவிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த உரையில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடவிருப்பது பற்றி உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அறிவிப்பைத்தொடர்ந்து இலங்கை அரசியலில் பல்வேறு திருப்பங்கள் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன், தினசரி அரசியல் அதிர்வுகள் காத்திருக்கின்றன என்கின்றது தெற்கு ஊடக வட்டாரம் ஒன்று.

எதிர்வரும் இருபத்தியெட்டாம் திகதி ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் நூல் வெளியீட்டு விழா கொழும்பு தாமரைத்தடாக உள்ளக அரங்கில் நடைபெறவிருக்கின்றது. அந்த விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாக கலந்துகொள்ளவிருக்கிறார். அந்த விழாவில் சரத் பொன்சேகா தான் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணையும் அறிவிப்பை வெளியிடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்கனவே, அவர் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவை கடுமையாக விமர்சித்து உரையாற்றியிருந்தமையும் அதனையடுத்து அவரை கட்சியிலிருந்து வெளியேற்றவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய தலைவர்கள் வலியுறுத்தியிருந்ததும் வாசகர்கள் அறிந்தவைதான். இந் நிலையிலேயே அவர், குறித்த நூல் வெளியீட்டு விழாவில் தான் கட்சி மாறும் அறிவிப்பை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனையடுத்து மறுநாள் சனிக்கிழமை மொனராகலையில் சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணியின் இரண்டாவது மாநாடு நடைபெறவிருக்கின்றது. அம்பாலாங்கொடையில் நடைபெற்ற முதலாவது மாநாட்டில் இருபதுக்கும் அதிகமான எம். பிக்கள் கலந்துகொண்டிருந்த நிலையில் மொனராகலையில் நடக்கும் இந்த இரண்டாவது மாநாட்டில் மேலும் சில முக்கிய எம். பிக்கள் மேடையேறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான இந்தக் கூட்டணியில் ஏற்கனவே, பல முக்கிய தலைவர்கள் கலந்துகொண்டு தமது ஆதரவை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வெளிப்படுத்தியிருந்தனர். பெரும்பாலும் இந்த மொனராகலை மாநாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய எம். பிக்கள் சிலரும் மேடையேறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. டாக்டர் ராஜித சேனாரத்ன ஏற்கனவே தனது ஆதரவை வெளிப்படுத்தி விட்டாலும் பகிரங்க மேடை எதிலும் இதுவரை ஏறவில்லை. அவர் பெரும்பாலும் அந்த மாநாட்டில் மேடை ஏறுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுகாலவரை ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக களம் இறங்கும் சந்தர்ப்பம் கிடைக்கலாம் என்ற நம்பிக்கையில் காத்திருந்த மற்றுமாரு முக்கிய தலைவரான பாட்டாலி சம்பிக்க ரணவக்கவும் மொனராகலை பேரணியில் கலந்துகொள்வார் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது. ஏதேனும் ஒரு காரணத்தால் ரணில் போட்டியிலிருந்து ஒதுங்கினால், பொதுவேட்பாளராக களம் இறங்கலாம் என்ற நம்பிக்கையில் இருந்தவர் சம்பிக்க. இப்போது ரணில் போட்டியிடுவது உறுதியாகி விட்ட நிலையில், அவரும் ரணிலுடன் இணைந்து அவரின் வெற்றிக்கு உழைக்க முடிவெடுத்துவிட்டாரெனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, வடக்கு - கிழக்கில் தனது முதலாவது தேர்தல் பிரசாரத்தை நிறைவு செய்திருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடைசியாக மட்டக்களப்பு மாவட்டத்துக்கு சென்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டதோடு, அங்குள்ள முக்கிய அரசியல் பிரமுகர்கள் அனைவரையுமே தனித்தனியாக சந்தித்திருக்கிறார்.

மட்டக்களப்பில் தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவானவர்கள் என்ற பட்டியலுக்கு வெளியே இருக்கும் அனைத்துத் தரப்பினரையும் தனித்தனியாக தேடிச்சென்று சந்தித்துள்ள ரணில், காத்தான்குடியில் ஹிஸ்புல்லா முதல் கருணா, பிள்ளையான், வியாழேந்திரன், சாணக்கியன் என்று அனைவரையும் இந்தப் பயணத்தில் சந்தித்திருப்பது கவனிக்கத்தக்கது.

தேர்தல் களம் களைகட்டத் தொடங்கிவிட்டது என்று தெரிகின்றது. இனி என்ன... தினமும் ஒரு திருப்பத்துடன் நாட்கள் நகரலாம்.

- ஊர்க்குருவி -

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஆர்ப்பாட்டம்!

மட்டக்களப்பு, ஜுன் 25

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் நீதி கோரி போராட்டம் ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்தப் போராட்டம் நேற்று காலை மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் தலைவி அ. அமலநாயகி தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர்.

போராட்டத்தின் இறுதியில், கோரிக்கைகள் அடங்கிய மனு



இதன்போது, சர்வதேச சமூகத்துக்குக் கொண்டுசெல்லும் வகையிலான கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றும் சங்க செயலாளரால் வாசிக்கப்பட்டது. (ஐ)



பண்டத்தரிப்பு - காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் முன்பள்ளி மாணவர்களின் மாதாந்த கலை விழா நிகழ்வில் பங்கேற்ற சிறார்கள்...

## யாழில் தம்பதியினர் மீது வாள்வெட்டுத் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஜுன் 25


யாழ்ப்பாணத்தில் மர்ம நபர் ஒருவர் வீடு புகுந்து தம்பதியினர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நவாலி வடக்குப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்த மர்ம நபரே இவ்வாறு தூக்கத்தில் இருந்த தம்பதியினர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த தம்பதியினர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## ஓட்டோ தடம்புரண்டதில் ஒருவர் காயமடைந்தார்!



யாழ்ப்பாணம், ஜுன் 25

முச்சக்கர வண்டி தடம்புரண்ட விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.


நேற்று திங்கட்கிழமை மானிப்பாய் - கோப்பாய் பிரதான வீதியில் உரும்பிராய் சந்திக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றது.

மருதனார்மடத்தில் இருந்து கோப்பாய் நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டி மற்றுமொரு முச்சக்கர வண்டியை முந்திச் செல்ல முற்பட்டபோது எதிரில் வந்த ஹைஏஸ் வாகனத்துடன் மோதி வேலிக்குள் புகுந்து கவிழ்ந்தது.

இந்த சம்பவத்தில் காயமடைந்த முச்சக்கர வண்டியின் சாரதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## விவசாயிகளுக்கு இலவச உரம்!



கொழும்பு, ஜுன் 25

விவசாயிகளுக்கு இலவச உரம் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் இரு போகங்களுக்கும் உரம் இலவசமாக வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
25.06.2024 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம், ஆனி 11

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணில் எதிர்ப்பா அல்லது இந்திய எதிர்ப்பா?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைப்பது தொடர்பில் உறுதியாக பேசி வருகின்றார். இந்த முன்மொழிவை முதன்முதலில் முன்வைத்தவரும் அவர்தான். விடுதலைப் புலிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதான பேச்சு காலத்தில் இவ்வாறானதொரு யோசனையை ரணில் முன்வைத்திருந்தார். எனினும், அவர் தேர்தலில் தோல்வியடைந்தமையைத் தொடர்ந்து அந்தத் திட்டம் கிடப்புக்குச் சென்றது.

2009இல் யுத்தம் முடிவுற்றதன் பின்னரான காலப்பகுதியில் கொழும்புக்கும் புதுடில்லிக்குமான உறவுநிலை சுமுகமாக இருக்கவில்லை. மகிந்த ராஜபக்ஷ அரசு வெளிப்படையாகவே சீன சார்பு அரசாங்கமாகவே செயல்பட்டது. இந்தியத் திட்டங்கள் மந்தகதியிலேயே முன்னகர்ந்தன. இதனால் புதுடில்லி கடும் அதிருப்தியுற்றது. 2015இல் ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து கொழும்புக்கும் புதுடில்லிக்குமான உறவில் முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தன. எனினும், இந்தக் காலத்தில்தான் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு 99 வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்கிய விடயமும் நடைபெற்றது. இதனால் புதுடில்லி அதிருப்தியுற்றாலும்கூட கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையிலான உறவில் பெரியளவில் விரிசல்கள் ஏற்படவில்லை.

2020இல் ரணிலும் அவர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் பெரியளவில் பின்னடைவை சந்தித்தன. கிட்டத்தட்ட ரணில் விக்கிரமசிங்க அரசியல் ரீதியில் மரணமடைந்து விட்டதான தோற்றமொன்றே தெரிந்தது. எனினும், அரசியலில் அதிர்ஷ்டம் எவரது கதவை எப்போது தட்டும் - அப்படித் தட்டும்போது அதனை தந்திரமாக பற்றிக் கொள்ளும் திறன் யாருக்கு இருக்கின்றது என்னும் கேள்விக்கான பதிலாக ரணில் விக்கிரமசிங்கவே இருக்கின்றார்.

மீண்டும் அனைவரும் மூக்கில் விரல் வைக்குமளவுக்கு அதிகார நாற்காலியில் அமர்ந்தார். இவ்வாறானதொரு பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முதல் புதுடில்லி பயணத்தின் போது பாலம் அமைக்கும் விடயம் தொடர்பான பேச்சை மீண்டும் ஆரம்பித்தார். இந்த விடயம் முன்னரைப் போன்று கடுமையாக எதிர்க்கப்படாவிட்டாலும்கூட தேர்தல் நெருங்கிவரும்போது ஒரு பிரதான பேசுபொருளாக வரக்கூடும். இந்தப் பின்னணியில்தான் பூனைக்கு மணி கட்டும் வேலையை கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆரம்பித்து வைத்திருக்கின்றார். அதாவது, பாலம் அமைந்தால் இலங்கை தமிழ்நாட்டின் ஒரு பகுதியாகவிடும். இது இலங்கைக்கு பேராபத்து என்று மல்கம் கூறியிருக்கின்றார். ஒரு வகையில் சிங்கள தேசியவாதிகளை உசுப்பிடும் வேலையை செய்திருக்கின்றார்.

இதனை மல்கம் ரஞ்சித் ஏன் செய்கின்றார்? அண்மைக்காலமாக அவ்வப்போது ரணில் விக்கிரமசிங்கவை அவர் விமர்சித்து வருகின்றார். மல்கம் ரஞ்சித் ராஜபக்ஷ குடும்பத்தோடு நெருக்கமாக இருந்தவர் என்பது அறியாத விடயமல்ல. எனினும், ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னர் தென்னிலங்கை அரசியல் தரப்புகளை தொடர்ந்தும் விமர்சித்து வந்தார். ஆனால், திடீரென்று பாலம் அமையுமானால் சிங்கள மக்களுக்கு ஆபத்து என்று பேசுகின்றார்.

மல்கம் ரஞ்சித்தின் கூற்றுக்கு பின்னால் இருப்பது ரணில்மீதான எதிர்ப்பா? அல்லது இந்திய எதிர்ப்பா அல்லது இலங்கைக்குள் இந்துக்களின் செல்வாக்கு அதிகரித்துவிடும் என்று அஞ்சுகின்றாரா அல்லது சிங்கள தேசியவாதத்தின் செல்லப்பிள்ளையாக தான் இருக்க வேண்டும் என்னும் ஆசையில் பேசுகின்றாரா? - ஏனெனில், சமவேளையில் மன்னாரில் அதானி குழுமத்தின் திட்டத்துக்கும் எதிர்ப்பு காண்பிக்கப்படுகின்றது. ஆச்சரியம் என்னவென்றால், ஆரம்பத்தில் சுற்றுச் சூழல் விடயம் தொடர்பில் அதிகம் பேசப்பட்டபோதும் தற்போது, ஓர் அலகு மின்சாரத்துக்கு அறவிடப்படும் கட்டணம் அதிகம் என்னும் வாதமே முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

# கொழும்பில் நேற்று 4 போராட்டங்கள்!

கொழும்பு, ஜூன் 25

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நேற்று திங்கட்கிழமை நான்கு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அரச ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள், பாடசாலை கல்விசாரா ஊழியர்கள் என 4 தொழிற்சங்கங்கள் நேற்று ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தன.

அரச ஆயுள்வேத வைத்திய அதிகாரிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பக் கோரியே போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இந்நிலையில் போராட்ட பகுதிகளில் பொலிஸார், இராணுவத்தினர், கலகத்தடுப்பு பிரிவினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

சம்பள பிரச்னை, நியமனங்கள் வழங்கப்படாமை, ஓய்வூதிய கொடுப்பனவுகள் சிறப்பு கொடுப்பனவுகள் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. (ஐ)

# சரத் பொன்சேகாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## கட்சி அமைப்பாளர்கள் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 25

பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவை ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வெளியேற்றுமாறு அந்த கட்சியின் கம்பஹா மாவட்ட தொகுதிகளின் அமைப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சரத் பொன்சேகா அண்மையில் கட்சித் தலைமையைக் கடுமையாக விமர்சித்திருந்தார்.

இந்த நிலையில் அவரை தொடர்ந்தும் கட்சியில் வைத்திருக்கக்கூடாது என்றும், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து அவரை கட்சியிலிருந்து நீக்குமாறும் கட்சி தலைமையிடம் அமைப்பாளர்கள் கோரியுள்ளனர்.

எவ்வாறாயினும் இந்த வாரம் கூடவுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு கூட்டத்தின் போது, சரத் பொன்சேகாவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பாக முடிவு செய்யப்படும் என்று அந்தக் கட்சி அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மைத்திரிக்கு எதிரான வழக்கு: ஒருதலைப்பட்சமாக விசாரணை

கொழும்பு, ஜூன் 25

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான வழக்கை ஒருதலைப்பட்சமாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மைத்திரிபால ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படுவதைத் தடுக் கும் தடை உத்தரவு தொடர்பான வழக்கு நேற்றுக் காலை எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீதிமன்ற விசார ணைக்கு முன்னிலையாகாமையால் இந்த ஒருதலைப்பட்ச விசாரணை தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் மொன்டேகு சரத் சந்திரவினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படுவதைத் தடுக்கும் தடை உத்தரவை ஏப்ரல் 04ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்தது. (அ)


# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



திருகோணமலை, ஜூன் 25

சமூக ஆர்வலரும் திருக்கோணமலை நகராட்சி மன்றத்தின் உத்தியோகத்தருமான த. பிரசாந்தன், திருகோணமலை மாவட்ட சமாதான நீதவானாக மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (எ-4)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



ஆனி - 25 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - ஆனி 11
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சதுர்த்தி




**மேடம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர், வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரை தருவார்கள். சவால்களில் வெற்றி பெறும் நாள்.

**இடபம்**
குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகி மகிழ்ச்சியான சூழல் உருவாகும். வேலைகள் தடையின்றி முடியும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். தடைப்பட்ட வேலைகள் முடியும்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மன உளைச்சல் ஏற்படும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பொறுமை தேவைப்படும் நாள்.

**கடகம்**
உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துக் கொள்வீர்கள். புது சலுகைகள் கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**சிம்மம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். தொட்டது துலங்கும் நாள்.

**கன்னி**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**துலாம்**
எதிர்பார்த்த சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் மீது அதிக அக்கறை காட்டுவார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி உங்கள் கோரிக்கையை ஏற்பார். தைரியம் கூடும்.


**தனுசு**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். உறவினர்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மனஇறுக்கங்கள் உருவாகும். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும்.

**கும்பம்**
சில வேலைகளை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப்பாருங்கள். மேலதிகாரிகளிடம் பிரச்னைகள் வரக்கூடும்.

**மீனம்**
திட்டமிட்ட காரியங்கள் கை கூடும். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை சந்திக்க நேரிடும். ஆன்மிக பெரியோரின் ஆசிகிட்டும். புதிய பொறுப்புகள் தேடி வரும். நினைத்தது நிறைவேறும் நாள்.

# சட்டப்பேரவைக் கூட்டத்தை புறக்கணித்தது அ. தி. மு. க.



சென்னை, ஜூன் 25

கள்ளச்சாராயம் அருந்தி 58 பேர் உயிரிழக்க காரணமாகயிருந்த தி. மு. க. அரசைக் கண்டித்து பிரதான எதிர்க்கட்சியான அ. தி. மு. க. சட்டப்பேரவை கூட்டத் தொடரைப் புறக்கணித்து தமிழகம் தழுவிய போராட்டங்களில் இறங்கியுள்ளது.

தமிழக சட்டசபை கூட்டத் தொடர் 20 ஆம் திகதி முதல் நடைபெற்றுவரும் நிலையில், கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய விவகாரத்தை கண்டித்து அ. தி. மு. கவினர் இரண்டு நாட்களாக கறுப்பு மேலங்கி அணிந்து சட்டசபைக்கு வந்தனர். கள்ளக்குறிச்சி விஷ சாராய விவகாரம் தொடர்பாக கடும் அமளியில் ஈடுபட்டதுடன், இரு நாட்களாக சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

இந்த நிலையில், சட்டசபையின் நேற்றைய கூட்டத்தை புறக்கணிப்பதாக அ. தி. மு. க. அறிவித்துள்ளது. கள்ளச்சாராய விவகாரம் தொடர்பாக நேற்றைய சட்டப்பேரவை நிகழ்வுகளை முழுமையாக புறக்கணித்து மாநிலம் தழுவிய போராட்டங்களில் அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ளனர் என்று அந்தக் கட்சி அறிவித்துள்ளது. (எ)

# தி. மு. க. அரசைக் கண்டித்து அ. தி. மு. கவினர் போராட்டம்



சென்னை, ஜூன் 25

கள்ளச்சாராய விற்பனையைத் தடுக்கத் தவறிய தி. மு. க. அரசைக் கண்டித்தும், மெத்தனால் கலந்த கள்ளச்சாராயம் அருந்தி 50 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த துயரச் சம்பவத்துக்கு தார்மீகப் பொறுப்பேற்று முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் பதவி விலக வேண்டும். இதற்கு உறுதுணையாக இருந்த தி. மு. க. எம். எல். ஏக்களை கண்டித்தும், பொலிஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் கள்ளக்குறிச்சியில் அ. தி. மு. க. சார்பில் நேற்றுக் கண்டனப் போராட்டம் நடைபெற்றது.

இந்த போராட்டத்தில் அ. தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிச்சாமி பங்கேற்று கண்டன உரையாற்றினார். இந்தப் போராட்டத்தில் அ. தி. மு. கவினர் கறுப்பு மேலங்கி அணிந்து பங்கேற்றனர். (எ)

# சி. பி. ஐ. விசாரணை வேண்டும்

சென்னை, ஜூன் 25

தமிழகத்தை உலுக்கிய கள்ளச்சாராய மரணங்கள் குறித்து சி. பி. ஐ. விசாரணை நடத்த வேண்டும் என்று ஆளுநர் ஆர். என். ரவியிடம் தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட குழுவினர் நேரில் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது, விஷ சாராய மரணம் குறித்து கள்ளக்குறிச்சிக்கு நேரில் சென்று நிலைமைகளை அவதானித்தமை தொடர்பில் எடுத்துக்கூறிய பா. ஜ. கவினர், இந்தச் சம்பவத்தில் தி. மு. கவுக்கு உள்ள தொடர்பு குறித்தும் ஆளுநரிடம் அறிக்கை சமர்ப்பித்தனர். (எ)

# வி. சி. க. போராட்டத்துக்கு பொலிஸார் அனுமதி மறுப்பு

சென்னை, ஜூன் 25

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணங்களைக் கண்டித்து விடுதலை சிறுத்தைகள் கட்சி அறிவித்திருந்த போராட்டத்துக்கு சென்னை பொலிஸார் அனுமதி மறுத்துள்ளனர். சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நேற்று மாலை 4 மணிக்கு போராட்டம் நடத்தத் திட்டமிட்டிருந்த நிலையிலேயே இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தியதில் உடல் நலம் பாதிக்கப்பட்டு 50 இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். 150 இற்கும் மேற்பட்டோர் பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விவகாரம் தமிழகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திள்ளது.

கள்ளக்குறிச்சி விஷ சாராய உயிரிழப்பு விவகாரம் தொடர்பாக தி. மு. க. அரசைக் கண்டித்து அ. தி. மு. க., பா. ஜ. க., தே. மு. தி. க., விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட கட்சிகள் போராட்டத்தை அறிவித்தன. ஆனால், இந்தப் போராட்டத்துக்கு பொலிஸார் அனுமதி மறுத்துள்ளனர். இருப்பினும் தமிழக பா. ஜ. க. சார்பில் தமிழகம் முழுவதும் தடையை மீறிப் போராட்டங்கள் நடந்து வருகின்றன. நேற்று அ. தி. மு. க. சார்பில் பெரும் போராட்டங்கள் நடந்தன. (எ)

# முன்னாள் அமைச்சர் தலைமறைவு?



கரூர், ஜூன் 25

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய மரணங்களைத் தடுக்கத் தவறிய தி. மு. க. அரசைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் அ. தி. மு. க. சார்பில் நேற்று மாவட்டத் தலைநகரங்களில் போராட்டங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், கரூரில் போராட்டம் நடைபெறவில்லை.

முன்னாள் அமைச்சர் எம். ஆர். விஜயபாஸ்கரின் முன்பிணை மீது இன்று (ஜூன் 25) தீர்ப்பு வழங்கப்படவுள்ளதும், அவர் தலைமறைவாக இருப்பதும் இதற்குக் காரணமாக இருக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டும், யானையும் சேர்ந்து பயணித்தால் வெற்றி நிச்சயம்!

## எஸ்.பி.திஸாநாயக்க கூறுகிறார்



**கொழும்பு, ஜுன் 25**

**பொதுஜன பெரமுன கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து பயணிக்காவிட்டால் ஜனாதிபதித் தேர்தலில் இரு கட்சிகளுக்கும் பின்னடைவு ஏற்படக்கூடும் என்று பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

பொதுஜன பெரமுன கட்சியின் ஆசியுடன் களமிறங்கினால் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவார். அவ்வாறு இல்லாவிட்டால் தோல்வியே ஏற்படும்.

ரணிலை பிரதமர் மற்றும் ஜனாதிபதி பதவிக்கு மொட்டு கட்சியே கொண்டுவந்தது. எனினும், மொட்டு கட்சி எதிர்பார்த்த அரசொன்று அமையவில்லை. எனவே, இரு தரப்புக்கும் இடையில் உள்ள முரண்பாடுகள் பேச்சு மூலம் தீர்க்கப்பட வேண்டும்.

பிரச்னைகளை தீர்த்துக் கொண்டு இணைந்து பயணித்தால் ரணிலுக்கு வெற்றி நிச்சயம். அது மொட்டு கட்சிக்கும் அல்ல. தனிவழியில் சென்றால் இரு தரப்புகளுக்கும் பின்னடைவு ஏற்படும்-என்றார். (அ)



# ஒரு மரவள்ளியில் 14 கிலோ கிழங்கு

கண்டி, ஜுன் 25

கண்டி, பிரிமத்தலாவ, கங்கொடையை வசிப்பிடமாகக் கொண்ட டபிள்யூ. சுபாசிறியின் தோட்டத்தில் இருந்து பிடுங்கப்பட்ட மரவள்ளி மரமொன்றில்14 கிலோகிராம் எடையுள்ள கிழங்குகள் விளைந்துள்ளன.

சுபசிறி, அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்று தற்போது விவசாயம் செய்து வருகிறார்.

இந்தப் பயிர் இரசாயன உரங்களைப் பயன்படுத்தாமல் அறுவடை செய்யப்பட்டது. இந்த அறுவடையின் சந்தை பெறுமதி சுமார் எட்டாயிரம் ரூபாவாகும்-என்றார். (அ)

# பொல்லால் தாக்கி மூதாட்டி கொலை!

## சகோதரனின் மகன் தப்பியோட்டம்

கொழும்பு, ஜுன் 25

காலி பிரதேசத்தில் கொனபீனுவல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சாமகம, அளுத்வல பகுதியில் உள்ள வீடொன்றில் பொல்லால் தாக்கப்பட்டு பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக கொனபீனுவல பொலிஸார் தெரிவித்தனர்.

சாமகம, அளுத்வல பகுதியைச் சேர்ந்த 76 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். இவர் தனது சகோதரனின் மகனுடன் நீண்ட காலமாக ஒரே வீட்டில் வசித்து வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் பொசன் பௌர்ணமி தினத்தன்று வழிபாடுகளை முடித்து விட்டு மீண்டும் வீட்டுக்குச் சென்ற பின்னர் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளன.

இந்த கொலைச் சம்பவமானது கடந்த 21 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதிக்குள் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்த சம்பவத்தையடுத்து, சந்தேக நபரான கொலை செய்யப்பட்டவரின் சகோதரனின் மகன் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# 8000 மாடி குடியிருப்புகளுக்கு கொழும்பில் உரிமை பத்திரம்

கொழும்பு, ஜுன் 25

கொழும்பு அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளர்களுக்கு உரிமைப் பத்திரம் வழங்கும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தின் கீழ் அடுத்த மாதம் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள 8000 அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கு இலவசப் பத்திரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கொழும்பு அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளர்கள் 50,000 பேருக்கு வீட்டு உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் அறிவித்ததுடன்



Prasanna

அதற்கேற்ப இந்த உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் கூற்றுப்படி, குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு 22 குடியிருப்புகளில் 14559 வீடுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இது தவிர தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை 1070 பத்திரங்களை வழங்கவும் திட்டமிட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இதன்படி, முதற்கட்டமாக, மிஹிந்து சென்புர, சிறிசர தோட்டம், மெட்சர தோட்டம், லக்முத்து செவன, சிறிமுத்து தோட்டம் ஆகிய திட்டங்களை மையப்படுத்தி உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

இதற்கு மேலதிகமாக லக்ஸந்த செவன, ரந்திய உயன, லக்முத்து உயன, முடோர உயன, சியசத செவன, புரடோர செவன, ஜயமக செவன, மிஹிஜய செவன, ஹெலமுத்து செவன, சியபட செவன, லக்சேத செவன, லக்கிரு செவன ஆகிய வீட்டுத் திட்டங்களுக்கு முன் உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன. இந்த ஆண்டு இறுதியில் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# முப்பது வருடங்களாக இலங்கையில் முறையான நிதிக் கொள்கை இல்லை

## விஜயதாச ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுன் 25

குற்றச் செயல்களில் ஈடுபட்டு சம்பாதிக்கும் பணத்தை பறிமுதல் செய்வதற்கான புதிய சட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

நான்கு நாள் கைத்தொழில் கண்காட்சியுடன் இணைந்து கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் கடன் மறுசீரமைப்பு தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனை கூறினார்.

கடந்த முப்பது வருடங்களாக இலங்கையில் முறையான நிதிக் கொள்கை இல்லை என தெரிவித்த அமைச்சர், அதனை அடிப்படை விடயமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

மேலும் நாட்டின் நான்கில் ஒரு பகுதி மக்கள் நிகர நிதி நிறுவனங்களால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்கப்படமாட்டாது!

கொழும்பு, ஜுன் 25


தேங்காய் எண்ணெய் விலை அதிகரிக்கப்படமாட்டாதென தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

42000 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர், பேராசிரியர் ரொஷான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இரு மடங்கு கூடுதலாக இவ்வாண்டு தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

எவ்வாறாயினும், இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய்க்கான பற்றாக்குறை, இம்மாத இறுதி அல்லது அடுத்த மாத நடுப்பகுதி வரை தொடருமென நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இறக்குமதியாளர்களுடன் கலந்துரையாடியதாக சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



தேங்காய் எண்ணெய் கொண்டுவருவதற்கான கொள்கலன் பற்றாக்குறை மற்றும் கப்பல் போக்குவரத்தின் தாமதம் என்பன இந்த நிலைமைக்கு காரணமென அவர் கூறினார்.

அது மாத்திரமன்றி இலங்கைக்கு தேங்காய் எண்ணெய் ஏற்றுமதியில் ஈடுபட்ட பிலிப்பைன்ஸ் நிறுவனம் மூடப்பட்டுள்ளமையும் இதற்கான காரணமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைமை தொடர்பான முழுமையான அறிக்கையை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அதிகரித்த கொடுப்பனவு இம்மாதம் முதல் கிட்டும்!

கொழும்பு, ஜுன் 25

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு இம்மாதம் முதல் வழங்கப்படும் என மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு விசேட சுற்றறிக்கை ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் யமுனா பெரேரா தெரிவித்துள்ளார்.

தற்போது 2,500 ரூபாவாக காணப்படும் கொடுப்பனவை 5,000 ரூபாவாக அதிகரிக்க அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையாக இல்லையெனில் எம் இனத்தை சிங்கள தேசத்திடமிருந்து காப்பாற்றமுடியாது

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. கவலை



வவுனியா, ஜூன் 25

**நாங்கள் ஒற்றுமையாக இல்லையெனில் எமது இனத்தை சிங்கள தேசத்தில் இருந்து காப்பாற்ற முடியாது. துப்பாக்கி சத்தம் இல்லாத போதும் எமது மக்களின் பூர்வீகத்தை ஒழித்து நிலங்களை அபகரிக்கின்ற திணைக்களங்களை வைத்துக் கொண்டு நிலத்தை பறிக்கும் செயற்பாடுகள் தொடர்கின்றன. ஒற்றுமை என்பது இப்போதும் இல்லாமல் இருப்பதை எண்ணுகின்றபோது கவலையாக இருக்கிறதென தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபக தலைவர் சிறி சபாரத்தினத்தின் சிலையை நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களின் விடுதலைக்காக தென்னிலங்கையில் பல சமர்களை செய்து தியாகங்கள் புரிந்து விடுதலைக்காக பாடுபட்ட ஒரு இயக்கமே தமிழீழ விடுதலை இயக்கம். அதன் தலைவருடைய சிலையை இன்று திறந்து வைத்துள்ளோம்.

நாங்கள் ஒற்றுமையாக இல்லை என்றால் எங்களது இனத்தையும், எங்களது நிலத்தையும், எங்களது பூர்வீகத்தையும் காப்பாற்ற முடியாது என்பதை சிறி அண்ணாவின் சிலை வெளிப்படுத்துகின்றது.

நாங்கள் ஒற்றுமையாக இல்லையெனில் எமது இனத்தை சிங்கள தேசத்தில் இருந்து காப்பாற்ற முடியாது. துப்பாக்கி சத்தம் இல்லாதபோதும் எமது மக்களின் பூர்வீகத்தை ஒழித்து நிலங்களை அபகரிக்கின்ற திணைக்களங்களை வைத்துக் கொண்டு நிலத்தை பறிக்கும் செயற்பாடுகள் தொடர்கின்றன. ஒற்றுமை என்பது இப்போதும் இல்லாமல் இருப்பதை எண்ணுகின்ற போது கவலையாக இருக்கிறது.

எங்களது இனத்தை காப்பாற்ற இருக்கின்றோம் என்று கூறுகின்ற தேசியத்தை நேசிக்கின்ற கட்சிகள் எல்லாம் வாய் அளவில் தான் இனத்தின் விடுதலை என்கிறார்களே தவிர, இனத்தின் விடுதலைக்காக ஒற்றுமையாக செயற்பட தயாரில்லை. மக்கள் விரும்பும் ஒற்றுமையை அவர்கள் செய்ய தயாரில்லை.

தலைவர் சிறிசபாரத்தினம் அவர்கள் ஒற்றுமைக்காக பாடுபட்டவர். விடுதலைப் புலிகள் கூட இந்தியாவில் ஒரு அணியாக இணைந்து செயற்பட்டனர்.

தமிழீ விடுதலை இயக்கம் ஒற்றுமைக்காக கொண்டு வருகின்ற வாய்ப்புக்களை எந்த விட்டுக் கொடுப்புக்களையும் செய்து எங்களது இனத்தையும் நிலத்தையும் காப்பாற்ற தயாராக இருக்கின்றோம்.

தமிழீழ விடுதலை இயக்கம் தமிழ் தேசியக் கூட்டமைப்பை உருவாக்க எப்படி ஒத்துழைத்ததோ அதேபோல் நாங்கள் விட்டுக் கொடுப்புக்களுடன் ஒற்றுமையை ஏற்படுத்த எந்த சவால்களையும் சந்திக்க தயாராகவுள்ளோம். மக்கள் தலைவனற்றவர்களாக இருக்கின்றார்கள். கட்சிகள் ஒற்றுமையாக வரவேண்டும் என விரும்புகிறார்கள்.

மக்களுக்காக துப்பாக்கி ஏந்தி எவ்வாறு பொது எதிரியை சந்தித்தோமோ அதேபோல் அந்த போராளிகளின் இலட்சியத்தை அடைய வேண்டும். எல்லா கட்சிகளையும் ஒன்றிணைத்து செயற்பட தயாராக இருக்கின்றோம்.

எம்மை பார்த்து சிலர் விமர்சனம் செய்கிறார்கள். ஒட்டுக் குழு என்கிறார்கள். இப்படி பல தேவையில்லாத கதைகளை பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் பலமாக இருக்கின்ற போது எங்களுக்குள் இருந்த முரண்பாடுகளை ஒரு பக்கம் வைத்து விட்டு எங்களது இனம் விடுதலை பெற வேண்டும் என்பதற்காக விடுதலை புலிகளோடு கைகோர்த்து செயற்பட்டோம் என்பதை பகிரங்கமாக எல்லா மக்களுக்கும் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

ஆகவே நாங்கள் ஒட்டுக்குழுக்கள் இல்லை. தேசியத்தை நேசிப்பவர்கள். நாங்கள் இராணுவத்திற்கு எதிராக முதன் முதல் போராடி இருந்தோம். எங்களது போராளிகளும் மரணித்திருக்கிறார்கள். ஆகவே அன்று முதல் நாம் மக்களின் இலட்சியத்தற்காகவே செயற்படுகின்றோம்-என்றார். (அ)

# கிரிக்கெட் வீரரின் வீட்டில் கொள்ளை!

கொழும்பு, ஜூன் 25

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான திலான் துஷாரவின் வீட்டில் கொள்ளைச் சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

கடந்த 20ஆம் திகதி அம்பலாங்கொடை - பலபிட்டிய பிரதேசத்திலுள்ள திலான் துஷாரவின் வீட்டுக்குள் அடையாளம் தெரியாத சிலர் நுழைந்து பெறுமதியான பொருட்களை கொள்ளையிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவரது வீட்டிலிருந்த 830,000 ரூபாய் பெறுமதியான தங்கம் உள்ளிட்ட பல பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

சம்பவம் இடம்பெற்ற காலப் பகுதியில் அப்பிரதேசத்தில் மேலும் பல வீடுகளிலும் கொள்ளைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் திலான் துஷாரவின் குடும்பத்தினர் அம்பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நீராடச் சென்ற பொலிஸ் அதிகாரி மீது பதுளையில் 10 பேர் சேர்ந்து தாக்குதல்!

கொழும்பு, ஜூன் 25

பதுளை பிரதேசத்தில் முச்சக்கரவண்டிகளில் சென்ற 10 பேரால் தாக்கப்பட்டு பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்துள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

முன்விரோதம் காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலுக்குள்ளான பொலிஸ் கான்ஸ்டபிள் பதுளை பிரதேசத்தில் உள்ள தனது சொந்த வீட்டுக்குச் சென்றுள்ள நிலையில் சம்பவத்தின்போது இவர் தனது உறவினருடன் முச்சக்கரவண்டியில் வெலிகேமுல்ல பகுதிக்கு நீராடச் சென்றுள்ளார்.

இதன்போது, அப்பகுதிக்கு நான்கு முச்சக்கரவண்டிகளில் சென்ற 10 பேர் இவரைத் தாக்கி காயப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் பதுளை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பாடசாலை மாணவனை தாக்கிய குற்றச்சாட்டில் எட்டு பேர் கைது!

கொழும்பு, ஜூன் 25

அநுராதபுரத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் 15 வயது மாணவன் ஒருவனைத் தாக்கிய சம்பவம் தொடர்பில் அதே பாடசாலையைச் சேர்ந்த 8 மாணவர்கள் கைதாகியுள்ளனர்.

குறித்த மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறியுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான மாணவன் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இந்த வருடம் இதுவரை இலங்கைக்கு 966,604 சுற்றுலாப் பயணிகள் வருகை

கொழும்பு, ஜூன் 25

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 966,604 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜூன் மாதத்தில் இதுவரையான காலப்பகுதிக்குள் 69,825 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அதன்படி, இவ்வருடத்தின் ஜனவரி மாதத்தில் 208,253 சுற்றுலாப் பயணிகளும், பெப்ரவரி மாதத்தில் 218,350 சுற்றுலாப் பயணிகளும், மார்ச் மாதத்தில் 209,181 சுற்றுலாப் பயணிகளும், ஏப்ரல் மாதத்தில் 148,867 சுற்றுலாப் பயணிகளும், மே மாதத்தில் 112,128 சுற்றுலாப் பயணிகளும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் ரஷ்யா, இந்தியா, ஜேர்மனி, பிரித்தானியா, சீனா, பிரான்ஸ் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

# விமானத்தில் இலங்கையரின் பயணப் பொதியில் திருட்டு!

கொழும்பு, ஜூன் 25

டுபாயிலிருந்து கட்டுநாயக்க நோக்கிப் பயணித்த விமானமொன்றில் பயணித்த இலங்கையர் ஒருவரின் பயணப் பொதியிலிருந்து பெறுமதியான பொருட்களைத் திருடியதாகக் கூறப்படும் சீன பிரஜைகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸார் தெரிவித்தனர்.

36 மற்றும் 31 வயதுடைய இரண்டு சீன பிரஜைகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹிக்கடுவை பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரின் பயணப் பொதியிலிருந்தே இவ்வாறு பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட இலங்கையரும் கைது செய்யப்பட்ட சீன பிரஜைகளும் நேற்று முன் தினம் அதிகாலை டுபாயில் உள்ள அபுதாபி நகரத்திலிருந்து விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட இலங்கையர் விமான நிலையத்தில் வைத்து தனது பயணப் பொதியைப் பார்த்த போது தனது பொருட்கள் அனைத்தும் திருடப்பட்டுள்ளதை அவதானித்துள்ளார்.

பின்னர், பாதிக்கப்பட்ட இலங்கையர் இது தொடர்பில் விமான நிலைய பொலிஸாரிடம் தெரிவித்ததையடுத்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருடப்பட்டதாகக் கூறப்படும் இரத்தினக் கல் பதித்த மோதிரம், இரு தங்க மோதிரங்கள், தங்க மாலை, கைக் கடிகாரம் உள்ளிட்ட 11 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# விலங்குகள், விலங்கு சார்ந்த பொருட்களை இலங்கைக்கு இறக்குமதி செய்ய கட்டுப்பாடு

கொழும்பு, ஜூன் 25

பறவைக் காய்ச்சல் பதிவாகியுள்ள எந்தவொரு நாட்டிலிருந்தும் விலங்குகள் அல்லது விலங்கு சார்ந்த உற்பத்திப் பொருட்களை இலங்கைக்கு இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படமாட்டாது என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை பல நாடுகளில் மீண்டும் தலைதூக்கியுள்ள பறவைக் காய்ச்சல் நோய்க்கிருமி நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்ந்தும் அமுல்படுத்தப்படும் எனவும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்தார்.

அத்துடன் மனிதர்களுக்கு இடையில் இந்த நோய் பதிவாகியமை மிகவும் ஆபத்தான நிலை என்றும் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், நாட்டில் நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளதால் பறவைக் காய்ச்சல் குறித்து தேவையற்ற அச்சம் கொள்ள தேவையில்லை எனவும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹேமாலி கொத்தலாவல மேலும் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு அனுப்புவதாக கூறி யாழில் இளைஞனிடம் ரூ. 60 இலட்சம் மோசடி!

## கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 25

**வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி இளைஞர் ஒருவரிடம் 60 இலட்சம் ரூபாய் மோசடி செய்த குற்றச் சாட்டில் யாழ்ப்பாணத்தில் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.**

குறித்த நபர், தன்னை சர்வதேச மனித உரிமைகள் காப்பகத்தில் பணியாற்றுவதாக அறிமுகப்படுத்தியுள்ளார்.

மேலும் மனித உரிமை காப்பகத்தின் ஊடாக இளைஞரை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்க முடியும் எனக் கூறி அவரிடம் 60 இலட்ச ரூபாய் பணத்தை பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில் நீண்ட காலமாகியும் இளைஞனை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்காததால், பாதிக்கப்பட்ட இளைஞர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் குறித்த நபரை கைது செய்துள்ளனர்.

விசாரணைகளில், குறித்த நபர் மனித உரிமைகள் காப்பகத்தில் வேலை செய்வதாகவும் , கொழும்பில் வசிப்பதாகவும் இளைஞனிடம் கூறியது பொய் எனவும், கிழக்கு மாகாணத்தைச் சொந்த இடமாக கொண்டு, கிழக்கு மாகாணத்திலேயே வசித்து வருகிறார் என்பதும் தெரியவந்துள்ளது.

குறித்த நபர் வேறு நபர்களையும் இவ்வாறு ஏமாற்றியுள்ளாரா என்பது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(அ)

# காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பெண் ஒருவர் உயிரிழப்பு!

## சாவற்கட்டு பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

சாவற்கட்டு பகுதியில் காய்ச்சலுக்கு மருந்து எடுத்து உட்கொண்ட நபரொருவர் உயிரிழந்தார்.

63 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணுக்கு கடந்த 20ஆம் திகதி திடீரென காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. அதற்காக 22ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்று மருந்தினை பெற்றுக்கொண்டு வீடு திரும்பியுள்ளார்.

மருந்தினை உட்கொண்ட பின்னர், மறுநாள் 23ஆம் திகதியான நேற்று முன் தினம் உடல் லை மிக மோசமாகி மூச்சு விட சிரமப்பட்ட நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது அவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் உடற்கூற்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மேலதிக பரிசோதனை நடவடிக்கைக்காக மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(அ)

# அரசுடன் சேர்ந்து சுகாதார அமைச்சர் பதவியைப் பெறுவதற்கு முயற்சியா?

## அடியோடு மறுக்கின்றார் ராஜித

கொழும்பு, ஜூன் 25

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தான் அரசாங்கத்துடன் இணைந்து சுகாதார அமைச்சராவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக வெளியாகியுள்ள தகவல்களை நிராகரித்துள்ளார்.

ராஜித சேனாரத்ன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இடம்பெற்ற பல நிகழ்வுகளில் கலந்துகொண்ட பின்னர் அவர் அரசாங்கத்துடன் இணைந்து சுகாதார அமைச்சராகவுள்ளார் என ஊகங்கள் வெளியாகியுள்ளன.

ராஜித சேனாரத்ன ஜனாதிபதியை பாராட்டி கருத்து வெளியிட்டு வருகின்றார்.

எனினும் இந்த ஊகங்களை நிராகரித்துள்ள ராஜித சேனாரத்ன, அமைச்சர் பதவி குறித்தோ அல்லது வேறு விடயங்கள் குறித்தோ அரசாங்கத்துடன் எந்த பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடவில்லை என தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் நெருங்குகின்ற நிலையில் அரசியல் மாற்றங்கள் நிகழ்வதற்கு வாய்ப்பில்லை என அவர் கூறினார்.

அரசாங்கத்துடன் நான் எந்த பேச்சுவார்த்தையிலும் ஈடுபடவில்லை. ஜனாதிபதி முன்னெடுத்துள்ள திட்டங்கள் குறித்து அவருடன் மாத்திரம் பேசியுள்ளேன் என ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார்.

(அ)

# குறுஞ்செய்தி, சமூக ஊடகம் மூலம் தொடர்ந்து நடைபெறும் மோசடிகள்!

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 25

பண்டிகைக் காலங்களை இலக்காகக் கொண்டு குறுஞ்செய்தி மற்றும் சமூக ஊடகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் நிதி மோசடிகள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு இலங்கை கணினி அவசர தயார் நிலைக் குழு பொதுமக்களை எச்சரித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்ட குறித்த குழு-

பல்வேறு வங்கிகள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்களால் அனுப்பப்படும் போலிச் செய்திகள் குறித்து பொதுமக்களை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த குழுவின் கூற்றுப்படி, "குறித்த மோசடிகள், நன்கொடைகள், பணப் பரிசுகள், அதிர்ஷ்டக் குலுக்கல்கள் மற்றும் வேலைக் காப்பீடு போன்றவற்றில் சட்டபூர்வமான நிறுவனங்களின் பெயரைப் பயன்படுத்தி ஈடுபடுகின்றன.

இந்நிலையில், சைபர் குற்றவாளிகள் போலி இணையதளங்கள், சமூக ஊடக தளங்கள், குறுஞ்செய்தி மற்றும் வாட்ஸ் அப் மூலம் தனிநபர்களைத் தொடர்பு கொள்ள முயற்சிக்கின்றனர்.

பாவனையாளர்கள் செய்தியில் வழங்கப்பட்ட இந்த இணைப்புகளை அணுகுவதன் மூலம், அவர்கள் கணினிகள் மற்றும் கையடக்க தொலைபேசிகளில் இருந்து தரவுகளை திருடலாம், இது பல்வேறு வகையான நிதி மோசடிகளுக்கு வழிவகுக்கும் என்று எச்சரித்துள்ளது.

மேலும் அண்மைக் காலங்களில் குறிப்பாக தேசிய மற்றும் மத விழாக்களை மையமாக வைத்து இவ்வாறான மோசடிகள் கணிசமான அளவு அதிகரித்துள்ளதாக இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு தெரிவித்துள்ளது.

(அ)

# கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட படகு ஐந்து மாதங்களின் பின்னர் இலங்கை வந்தது

கொழும்பு, ஜூன் 25

மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நிலையில் சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்திச்செல்லப்பட்ட "லொரென்சோ புத்தா 04" இழுவைப் படகு சுமார் ஐந்து மாதங்களின் பின்னர் நாட்டை வந்தடைந்துள்ளது.

குறித்த படகு ஆறு மீனவர்களுடன் நேற்று முன் தினம் பிற்பகல் திக்கோவிட்ட துறைமுகத்தை வந்தடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சிலாபம் - திக்கோவிட்ட மீன்பிடி துறைமுகத்தில் இருந்து தமது பயணத்தை ஆரம்பித்த "லொரென்சோ புத்தா 04" மீன்பிடி இழுவைப் படகு ஆறு மீனவர்களுடன் சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களம் கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி உறுதிப்படுத்தியது.

இதன்படி, "லொரென்சோ புத்தா 04" சோமாலியாவின் மொகடி/ கடற்கரையில் இருந்து 500 கடல் மைல் தொலைவில் கடற்கொள்ளையர்கள் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

இதனைத் தொடர்ந்து படகை மீட்பதற்கு இலங்கை கடற்படை, இந்திய கடற்படை மற்றும் சீஷெல்ஸ் கடற்படை ஆகியவை இணைந்து தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன.

இதன்படி, இலங்கை மற்றும் சீஷெல்ஸ் அதிகாரிகளின் ஒருங்கிணைப்பு மற்றும் தகவல் பரிமாற்றத்தின் பின்னர் கடந்த 29 ஆம் திகதி சீஷெல்ஸ் கடலோர காவல்படையினால் படகு கைப்பற்றப்பட்டது.

அத்துடன், படகு சீஷெல்ஸ் தளத்தில் நங்கூரமிடப்பட்டதுடன், மூன்று சோமாலிய கொள்ளையர்களும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# யுத்தத்தின்போது காணாமல் ஆக்கப்பட்ட வடக்கு மக்களுக்கு அநுரவின் ஆட்சியில் நீதி

## பிமல் ரத்நாயக்க சூளுரை



கொழும்பு, ஜூன் 25

யுத்தத்தின் போது காணாமல் ஆக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கு தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ் நீதி நிலைநாட்டப்படும் என கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ் தெற்கில் வாழும் மக்களுக்கும், வடக்கு - கிழக்கு மலையக வாழ் தமிழ் முஸ்லிம் மக்களுக்கும் இன, மத, சாதி, நிற பேதமின்றி அனைவரும் ஒன்றாக வாழக்கூடிய நாட்டை உருவாக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கில் போரினால் பெருமளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், காணாமல் போனவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதை ஆட்சியில் இருந்த ஒவ்வொரு அரசாங்கமும் ஏற்றுக்கொண்டதாகவும், ஆனால் அவர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை எனவும், தங்கள் அரசாங்கத்தின் கீழ் நீதி நிலைநாட்டப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்த காலத்தின் பின்னர் வடக்கு மக்களுக்கு சொந்தமான காணிகளை இராணுவம் விட்டுச் சென்ற போதிலும் அவர்களுக்கு அந்த காணிகள் உரியதாக இல்லை, அவர்களுக்கு நியாயமான தீர்வுகள் வழங்கப்பட வேண்டும் எனவும், அதனை பாதுகாக்கும் நாடு என்பதை உணர வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(அ)

# இரண்டு பெரும் கஞ்சாச் செய்கை ட்ரோன் மூலம் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூன் 25

யால தேசிய பூங்காவில் மிக நுட்பமாக பயிரிடப்பட்ட இரண்டு கஞ்சா பயிர்ச்செய்கைகளை பொலிஸார் ட்ரோன் கமெரா தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கண்டுபிடித்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் உடவளவ முகாமைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.


இந்த நடவடிக்கையின் போது 35 பேர்ச்சஸ் மற்றும் 25 பேர்ச்சஸ் பரப்பளவிலான காணியில் கஞ்சா பயிரிடப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்பதுடன் மேலதிக விசாரணைகளை [illegible] மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்முனை பிரதேச செயலகத்தை பூட்டி மக்கள் நேற்று வீதி மறியல் போராட்டம்





கல்முனை, ஜூன் 25

**கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தக் கோரி நேற்று 92 ஆவது நாளாக தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, பிரதேச செயலக நுழைவாயில் கதவைப் பூட்டி மக்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு நீதி கோரியும் தமது அடிப்படை உரிமைக்காகவும் மக்கள் கடந்த 90 நாட்களுக்கு மேலாக அமைதி வழியில் போராடி வருகின்றனர். 92 ஆவது நாளாகிய நேற்று கல்முனை வடக்கு பிரதேச செயலகம் முன்பாக மக்கள் பெருமளவில் குவிந்தனர். பிரதேச செயலகத்தின் நுழைவாயிலை பூட்டிய மக்கள் அரச உத்தியோகத்தர்களை உள்நுழைய விடாமல் உரிய அதிகாரிகளும் அரசும் தமக்குத் தீர்வைத் தரவேண்டும் என்ற கோஷத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பிரதேச செயலகத்தின் முன்பாக கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி திங்கட்கிழமை பொதுமக்கள் பல்வேறு சுலோகங்களை உள்ளடக்கிய பதாதைகளை தாங்கிய வண்ணம் அமைதி வழியில் ஒன்று கூடி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன் தொடர்ச்சியாக 92 ஆவது நாளான நேற்றும் அதிகளவான மக்கள் பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர். குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபவனியாக சென்றதுடன் கல்முனை நகரில் வீதி மறியல் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

மேலும் கடந்த காலங்களில் உதவி அரசாங்க அதிபர் பிரிவாக செயல்பட்டு வந்த கல்முனை வடக்கு பிரதேச செயலகம் 1988 களில் தனியான பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து 1993 ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் பெற்று தனியான பிரதேச செயலகமாக கடந்த 30 வருட காலமாக இயங்கி வருவதாகவும் கூறப்படுகிறது.

இருந்தபோதிலும் ஒருசில அரசியல்வாதிகள் தொடக்கம் உயர் அதிகாரிகள் வரை குறித்த பிரதேச செயலகத்தின் மீது நிர்வாக அடக்குமுறைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதால் பொது மக்களாகிய தாங்கள் இப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்தனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம்பெற்று வரும் சூழ்ச்சிகளையும் நிர்வாக அடக்குமுறைகளையும் கண்டித்தும் திட்டமிடப்பட்டு பிரதேச செயலக உரிமைகளை ஒடுக்கும் நிர்வாக அடக்குமுறைகளை இனியும் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது எனவும் அரசாங்கம் இனியும் வாக்குறுதிகளை வழங்கி காலத்தை இழுத்தடிக்காது உடன் தீர்வைத் தரும் வரை போராட்டம் தொடரும் என மக்கள் உறுதிபடத் தெரிவித்தனர். (எ)

# காத்தான்குடி வீதியில் விபத்து இருவர் காயம், வாகனம் சேதம்

காத்தான்குடி, ஜூன் 25

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதான வீதியில் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் காயமடைந்துடன் வானகமும் பலத்த சேதமடைந்தது.




கல்முனையைச் சேர்ந்த குடும்பத்தினர் பொலநறுவையிலிருந்து கல்முனைக்குத் திரும்பிக் கொண்டிருந்த போது அவர்கள் பயணித்த வான் காத்தான்குடி முதலாம் குறிச்சி பிரதான வீதியில் பெரிய பூச்சாடி ஒன்றில் மோதுண்டு இந்த விபத்து சம்பவம் நிகழ்ந்தது.

இதில் வான் சாரதியும் அதில் பயணித்த சிறு பிள்ளையொன்றும் சிறிய காயத்துக்குள்ளாகியுள்ளனர்.

வானின் முன்பகுதி முற்றாக சேதமடைந்ததுடன் பூச்சாட்டியும் உடைந்து சேதம் ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் காத்தான்குடி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## மருத்துவத் துறைக்கு தெரிவான மாணவன் பாராட்டி கௌரவிப்பு



கல்முனை, ஜூன் 25

அம்பாறை மாவட்டத்தில் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் முதனிலை பெற்று மருத்துவத் துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவன் பிர்தௌஸ் இஹ்சான் அஹமட்டை, இலங்கை ஜமா அதே இஸ்லாமி கல்முனை மன்றம் மற்றும் மஸ்ஜிதுல் ஹைராத் பள்ளிவாசல் ஆகிய நிறுவனங்கள் இணைந்து பாராட்டிக் கௌரவித்தன. (எ)

## திருமலையில் "கரும்பலகை" நாவல் வெளியீட்டு நிகழ்வு



திருகோணமலை, ஜூன் 25

கரவை மு. தயாளன் எழுதிய கரும்பலகை நாவல் வெளியீட்டு விழா எண்ணம்போல் வாழ்க்கை இயக்குநர் கனக. தீபகாந்தன் தலைமையில் திருகோணமலை நகராட்சி மன்ற கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வவுனியா தேசிய கல்வியல் கல்லூரியின் மேனாள் உப பீடாதிபதி ந. பார்த்தீபன் பிரதம விருந்தினராகவும் திருகோணமலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ. சண்முகநாயகம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

# மு. காவின் பேராளர் மாநாட்டில் கைகலப்பு

## விசாரணைக்கு குழு நியமனம்

காத்தான்குடி, ஜூன் 25

சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பேராளர் மாநாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதம் குறித்து விசாரணைகளை முன்னெடுப்பதற்கு கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் விசேட குழுவொன்றை நியமித்திருப்பதாக கட்சியின் அம்பாறை மாவட்ட செயல்குழுவின் செயலாளரும் உயர்பீட உறுப்பினருமான ஏ. சி. சமால்டீன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை காத்தான்குடி ஹிஸ்புல்லா கலாசார மண்டபத்தில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் 31 ஆவது பேராளர் மாநாடு நடைபெற்றது. இதன்போது, சம்மாந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த கட்சியின் இரு ஆதரவாளர் குழுக்களுக்கு இடையே கைகலப்பு சம்பவங்கள் இடம்பெற்றிருந்ததுடன் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.


இந்தச் சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாணைகளை ஆரம்பித்து, அது தொடர்பான அறிக்கையை ஒரு வார காலத்துக்குள் சமர்ப்பிக்குமாறு ரவூப் ஹக்கீம் குறித்த விசாரணைக் குழுவினரைப் பணித்துள்ளார்.

கட்சியின் செயலாளர் நாயகம் நிசாம் காரியப்பர் தலைமையில் தவிசாளர் ஏ. எல். அப்துல் மஜீத், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநரும் கட்சியின் பிரதித் தலைவருமான ஹிஸ்புல்லா ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதவழிபாட்டு தலங்கள்மீது பயங்கரவாதிகள் தாக்குதல்

**ரஷ்யாவில் 17 பேர் பலி!**



**மொஸ்கோ, ஜூன் 25**

**ரஷ்யாவில் கிறிஸ்தவ மற்றும் யூத மதவழிபாட்டுத் தலங்களை குறிவைத்து பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதல்களில் 17 பேர் பரிதாபமாகப் பலியாகினர்.**

ரஷ்யாவின் காக்கசஸ் மாகாணம் மக்கஞ்கலா, டர்பெண்ட் ஆகிய நகரங்களில் உள்ள மத வழிபாட்டுத் தலங்கள் மீதே பயங்கரவாதிகள் இவ்வாறு தாக்குதல் நடத்தினர். மதவழிபாட்டுத் தலங்களுக்குள் நுழைந்த பயங்கரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். மேலும், மத போதகரை கழுத்தறுத்து கொலை செய்தனர். பின்னர், மதவழிபாட்டுத் தலங்களுக்குத் தீ வைத்தனர்.

இதேவேளை, டர்பெண்ட் நகரில் உள்ள பொலிஸ் சோதனைச்சாவடியை குறிவைத்தும் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தக் கொடூரத் தாக்குதலில் 17 பேர் உயிரிழந்தனர். இதில் பெரும்பாலானோர் பொலிஸார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பயங்கரவாதத் தாக்குதல் நடந்த நகரங்களுக்கு கூடுதல் படையினர் விரைந்தனர். பயங்கரவாதிகள் - பாதுகாப்புப் படையினர் இடையே கடும் மோதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் 6 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் ஐ. எஸ். பயங்கரவாத அமைப்பால் நடத்தப்பட்டதாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது. முன்னதாக, கடந்த மார்ச் மாதம் ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் இசைநிகழ்ச்சி நடந்த அரங்கில் நுழைந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 137 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)



# ஹஜ் யாத்திரிகர்கள் 1,300 பேர் உயிரிழப்பு

ரியாத், ஜூன் 25

சவுதி அரேபியாவில் நிலவி வரும் கடும் வெப்பம் காரணமாக ஹஜ் யாத்திரை மேற்கொண்டவர்களில் சுமார் 1,300 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததாக அந்த நாட்டு அதிகாரிகள் அறிவித்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்தவர்களில் 83 சதவீதம் பேர் யாத்திரை மேற்கொள்ள முறைப்படி. பதிவு செய்யாதவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இந்தத் தகவலை சவுதி அதிகாரபூர்வமாக உறுதி செய்தது. ஹஜ் யாத்திரை மேற்கொண்டவர்கள் நீண்ட நேரம் சூரிய ஒளியின் கீழ் வெகு தூரம் நடந்து வந்ததும், தங்கும் வசதி இல்லாததும் இதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அதிகபட்சமாக எகிப்தை சேர்ந்த 658 பேர் உயிரிழந்தனர். அதில் 630 பேர் முறைப்படி பதிவு செய்யாதவர்கள்.

கடந்த 50 ஆண்டுகளில் மக்கள் அதிகம் கூடும் மதம் சார்ந்த நிகழ்வுகளில் சுமார் 9,000 பேர் உயிரிழந்தனர். அதில் சவுதியில் மட்டும் 5,000 பேர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# காயமடைந்த பலஸ்தீனரை ஜீப்பில் கட்டி கொண்டு சென்ற இராணுவம்

**இஸ்ரேல் மீது குவியும் குற்றச்சாட்டுகள்**



ஜெருசலேம், ஜூன் 25

மேற்கு கரையில் தேடுதல் வேட்டையின்போது காயமடைந்த பலஸ்தீனரை இஸ்ரேலிய இராணுவம் ஜீப்பில் கட்டி இழுத்துச் சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது மனித உரிமை மீறல் என சர்வதேச அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

மேற்கு கரை ஜெனின் நகரத்தில் கடந்த சனிக்கிழமையன்று இஸ்ரேலிய இராணுவம் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது. அப்போது நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் பலஸ்தீனர் ஒருவர் காயமடைந்தார். அவருக்கு முதலுதவி செய்யாமல் இஸ்ரேலிய இராணுவம் ஜீப்பின் முன்பக்கம் கட்டி இழுத்துச் சென்றது. இதுதொடர்பான வீடியோ வைரலானதையடுத்து இஸ்ரேல் இராணுவத்தின் இந்த மனிதாபிமானமற்ற செயலுக்கு சர்வதேச அளவில் கண்டனங்கள் எழுந்துள்ளன. (எ)

# பூமி மீது குறுங்கோள் மோதும்

**ஆய்வில் அதிர்ச்சி தகவல்**

வாஷிங்டன், ஜூன் 25

சக்தி வாய்ந்த குறுங்கோள் ஒன்று பூமியை 72 சதவீதம் தாக்கக் கூடிய சாத்தியக்கூறு உள்ளது என்ற அதிர்ச்சித் தகவலை நாசா வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம், பூமி மீது மோதக் கூடிய குறுங்கோள் பற்றிய ஆய்வை கடந்த ஏப்ரலில் மேற்கொண்டது. இந்த ஆய்வு முடிவை கடந்த 20 ஆம் திகதி நாசா வெளியிட்டது.

அமெரிக்காவின் மேரிலேண்ட் மாகாணத்தில் லாரெல் நகரில் உள்ள ஜோன்ஸ் ஹாப்கின்ஸ் இயற்பியல் ஆய்வகத்தில் வெளியிடப்பட்ட இந்த ஆய்வு முடிவில், சக்தி வாய்ந்த குறுங்கோள் ஒன்று பூமியை 72 சதவீதம் தாக்கக் கூடிய சாத்தியக்கூறு உள்ளது என்ற அதிர்ச்சித் தகவல் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவின் பல்வேறு அரசு அமைப்புகள் மற்றும் சர்வதேச குழுவினர் என 100 பிரதிநிதிகள் வரை இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டனர். இந்த பெரிய குறுங்கோள் மோதலானது இயற்கை பேரிடரில் ஒன்றாக இருக்கிறது. எனினும், தொழில்நுட்ப உதவியுடன், மனித குலம் அதனை முன்பே கணிக்கக் கூடிய ஒன்றாகவும் உள்ளது.



இதுதவிர, இதனை பல ஆண்டுகளுக்கு முன்பே கண்டறிந்து, அதனை தடுப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என வாஷிங்டனில் செயல்பட்டு வரும் நாசா தலைமையகத்தின் கோள்கள் பாதுகாப்பு அதிகாரியான லிண்ட்லே ஜோன்சன் கூறியுள்ளார்.

இதன்படி, 2038 ஆம் ஆண்டு ஜூலை 12 ஆம் திகதி (14. 25 ஆண்டுகள் எச்சரிக்கை காலம்) பூமி மீது குறுங்கோள் மோதுவதற்கான வாய்ப்பு 72 சதவீதம் என்ற அளவில் உள்ளது.

எனினும், இந்த முதல்கட்ட ஆய்வில் குறுங்கோளின் அளவு, அதில் கலந்துள்ள பொருட்கள் மற்றும் நீண்டகால இயங்கு பாதை உள்ளிட்ட விவரங்களை சரியாக தீர்மானிக்க முடியவில்லை என்று நாசா தெரிவித்துள்ளது. இந்த குறுங்கோள் மோதலை தடுக்கப் போதியளவில் நாம் தயாராக இல்லை என்றும் நாசா தெரிவித்துள்ளது. (எ)

# சர்வதேச ரீதியில் 4 இல் ஒரு குழந்தை ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிப்பு

நியூயோர்க், ஜூன் 25

அன்றாடம் சத்தான உணவு வகைகள் கிடைக்காத குழந்தைகளின் நிலையை 'குழந்தை உணவு வறுமை' என்று யுனிசெப் மற்றும் உலக சுகாதார அமைப்பு இணைந்து வரையறுத்துள்ளன. இந்த நிலையில், குழந்தை உணவு வறுமையால் தெற்காசிய நாடுகள் மற்றும் துணை சஹாரா ஆபிரிக்க பிராந்தியங்கள் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் 18 கோடியே 10 இலட்சம் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து போதாமையால் அவர்களது உயரம், உடல் உள்ளிட்ட ஒட்டுமொத்த வளர்ச்சியும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த 18. 1 கோடி பாதிக்கப்பட்ட குழந்தைகளில் 65 சதவீதத்தினர் இந்தியா, கினியா, ஆப்கானிஸ்தான், புர்க்கினா பாசோ, எதியோப்பியா உள்ளிட்ட 20 நாடுகளைச் சேர்ந்தவர்கள். தெற்காசிய நாடுகளில் மட்டும் 6 கோடியே 40 இலட்சம் குழந்தைகள் ஊட்டச்சத்து மிக்க உணவு இன்றி பாதிக்கப்பட்டுள்ளன. அந்த பட்டியலில் சோமாலியா முதலிடத்தில் உள்ளது. கொரோனா பெருந்தொற்றுக்குப் பிந்தைய காலத்தில் பொருளாதார சிக்கல்களில் இருந்து ஓரளவு மீண்டாலும் உணவுப் பண்டங்கள் உட்பட அனைத்து விதமான பொருட்களின் விலைகளும் அதிகரித்திருப்பதே இந்த அவல நிலைக்கு காரணம் என்று அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்தின் வெற்றியை யாரும் தடுக்கமுடியாது

## சந்திம வீரக்கொடி உறுதி



கொழும்பு, ஜூன் 25

**ரணில் விக்கிமசிங்க, தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதில் பலமற்றவர் எனவும், சஜித் பிரேமதாஸாவின் வெற்றியை யாராலும் தடுக்க முடியாது எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ரணில் விக்கிமசிங்க தேர்தலில் போட்டியிடுவராக இருந்தால் எமது கட்சி மேலும் வலுப்பெறும்.

ஏனெனில் அவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதில் பலமற்றவர். அவரை போன்ற ஒருவர் வேட்டபாளராக முன்னிலையாவாராக இருந்தால், அவருடன் இருப்பவர்களும் எம்முடன் வந்து இணைந்துகொள்வார்கள்.

ஆகவே சஜித் பிரேமதாசவின் வெற்றியை எம்மால் யாராலும் தடுக்க முடியாது.

ஐக்கிய மக்கள் சக்தி எதிகாலத்திற்கு சிறந்த கட்சி என்பதை போன்று நாட்டுக்கும் சிறந்த கட்சி.

சஜித் பிரேமதாஜவைப் போன்ற ஒரு தலைவர் கிடைப்பது கடளின் ஆசீர்வாதமாகும்.

அத்துடன் தற்போதைய சர்வதேச நாணய நிதியத்தின் செயற்பாடும் தேர்தலை நோக்கியதொன்றாகும்.

பிள்ளையான் போன்ற தீவிரவாத குழுக்களுடன் தொடர்புடைய தலைவர்கள், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இருந்தமையினாலேயே, வடக்கு-கிழக்கு மக்கள் மகிந்த ராஜபக்ஷவை நிராகரித்தார்கள்.

அத்தோடு ரணில் விக்கிமசிக்கவுக்கு வடக்கு - கிழக்கில் ஆதரவு கிடைத்தமைக்கான காரணமும், பிள்ளையான் போன்றவர்களை அவர் இணைத்துக் கொள்ளாததால் தான்-என்றார். (அ)

# சரத் பொன்சேகாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## கூறுகிறார் ரஞ்சித் மத்தும பண்டார

கொழும்பு, ஜூன் 25

கட்சித் தலைமையை விமர்சிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சரத்பொன்சேகாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அதன்படி, கட்சிக்குள் இருந்து கொண்டு தலைமையை விமர்சிப்பது ஏற்புடையது அல்ல எனவும் சரத் பொன்சேகா ஜனாதிபதியுடன் இணைவதற்கு தயாராகி வருவதாகவும் அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா கடந்த வார பாராளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை மறைமுகமாகத் தாக்கிப் பேசியிருந்தார்.

தன்னை பாராளுமன்றில் கருத்து தெரிவிக்கவிடாது எதிர்க்கட்சிகள் தடுப்பதற்கு முயற்சிப்பதாக பொன்சேகா குற்றம் சுமத்தியிருந்தார்.

தனக்கு பாராளுமன்றில் பேசுவதற்கு நேரம் வழங்க வேண்டாம் என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்லவுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக பொன்சேகா தெரிவித்திருந்தார்.

இவ் விடயம் தற்போது பேசுபொருளாக மாறியதையடுத்து, எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல இது குறித்து பதிலளித்திருந்தார்.

அதன்படி, கட்சி மீது வழக்கு தொடுத்து தலைமையை விமர்சிக்கும் ஒருவருக்கு எவ்வாறு பாராளுமன்றத்தில் கால அவகாசம் வழங்க முடியும் என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா கேள்வி எழுப்பியுள்ளார்.

எவ்வாறாயினும் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவை ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து நீக்குவது தொடர்பில் எந்தவொரு தீர்மானமும் எடுக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆடை தொழிற்சாலையில் கருச்சிதைவு அடையாளம்!

## கிளிநொச்சி பொலிஸார் விசாரணை

கிளிநொச்சி, ஜூன் 25

கிளிநொச்சியில் உள்ள தனியார் ஆடைத் தொழிற்சாலையில் கருச்சிதைவுகள் அடையாளம் காணப்பட்ட நிலையில் பொலிஸாரினால் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றிலேயே இவ்வாறு கருச்சிதைவுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்துக்கு வருகைத் தந்திருந்த பொலிஸார் குறித்த சிதைவுகளை கைப்பற்றி பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

மேலும், சம்பவ இடத்திற்கு சென்று கிளிநொச்சி பதில் நீதவான் விசாரணைகளை மேற்கொண்டார்.

தனியார் நிறுவன வளாகத்தினால் குறித்த செய்தியைக் காட்சிப்படுத்த ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# அரசியல் வாழ்க்கைக்கு பாதுகாப்பு வழங்கிய கட்சிக்கு துரோகம் இழைத்தார் பொன்சேகா!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 25

தனது அரசியல் வாழ்க்கைக்கு பாதுகாப்பு வழங்கிய, அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொடுத்த ஐக்கிய மக்கள் சக்திக்கு சரத்பொன்சேகா துரோகம் செய்வது முறையல்ல என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் என்ற ரீதியில், சரத் பொன்சேகாவிற்கு, வழங்கப்பட்டிருந்த கடமைகள், எதிர்கால அரசியல் மற்றும் எதிர்பார்ப்புக்கள் என்னவென்று கட்சியின் தலைவரால் அவருக்கு மிகத் தெளிவாக வழங்கப்பட்டிருந்தது.


அதற்குமேல் அவருக்கு வேறொரு அரசியல் கட்சி, வேறு நோக்கம் வேறு எதிர்பார்ப்புக்களை வழங்கியிருக்கக்கூடும்.

இந்த நாட்டில் மீண்டும் இராணுவத்தில் செயற்பட்ட ஒருவரிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டிய அவசியம் நாட்டு மக்களுக்கு கிடையாது என நினைக்கின்றேன்.

2019 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷவிடம் நாட்டை ஒப்படைத்து என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும்.

மோசமான, கொள்ளைக்கார அரசியல் தலைவர்களுக்கு அரசியல் ரீதியாக, சட்டப்படி எவ்வாறான தண்டனைகளை வழங்கமுடியும் என்பது குறித்தான பொறுப்பை நாம் சரத் பொன்சேகாவிற்கு, வழங்கியிருந்தோம். அதையும் தாண்டி அவர் என்ன எதிர்பார்க்கின்றார் என்பது தெரியவில்அவரின் அரசியல் வாழ்க்கையை பாதுகாத்த, அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொடுத்த ஐக்கிய மக்கள் சக்திக்கு அவர் துரோகம் செய்வது சரியான ஒரு விடயம் அல்ல-என்றார். (அ)

# யாழ்.போதானா வைத்தியசாலை செல்பவர்களுக்கு விசேட வசதிகள்!



யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்.போதனா வைத்தியசாலையில், நோயாளர்களுடன் வரும் உறவினர்கள் மற்றும் உதவியாளர்கள் நலன் கருதி சிவசி இல்லம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சிவசி இல்லம் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் தெரிவிக்கையில்-தூர இடங்களில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களுடன் வரும் உறவினர்கள் மற்றும் உதவியாளர்கள் பல சிரமங்களை எதிர்கொள்ளுகின்றார்கள்.

இவ்வாறானவர்கள் நோயாளிகளை யாழ்.போதனா வைத்தியசாலை விடுதிகளில் வைத்திருக்கும் நாட்களில் ஓய்வெடுப்பதற்கும், குளித்து உடை மாற்றிக் கொள்வதற்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

சிவசி இல்லம் நோயாளிகளின் உறவினர்களுக்கான சேவை மையம் என்ற பெயரில் குறித்த இல்லம் இல.76, வைத்தியசாலை வீதியில் (சத்திரச் சந்திக்கு அப்பால்) நேற்று திங்கட்கிழமை பொதுமக்களின் பயன்பாட்டுக்கு திறந்து வைக்கப்பட்டது.

மேற்படி சேவைக்காக படுக்கை அறைகள், குளிப்பறைகள் உள்ளடங்கலாக வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த இலவச சேவையை யாழ் போதனா வைத்தி யசாலை நோயாளர் நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய் துள்ளது. The Saivite Tamil Foundation, USA அமைப்பு இதற்கான நிதி அனுசரணையை வழங்கி செயல்படுத்துகின்றது.

சேவை தேவை நலன்புரிச்சங்க நோயாளர் பராமரிப்பு காரியாலயத்தில் விண்ணப்ப படிவத்தை பெற்று நோயாளி கள் அனுமதிக்கப்பட்டிருக்கும் விடுதிகளுக்கு பொறுப்பானவர் களிடம் சிபாரிசுப் படிவத்தை கையளிக்க வேண்டும். தகுதியா னவர்கள் இந்த இலவச சேவையை பெற்றுக் கொள்ளலாம்-என வைத்தியசாலைநிர்வாகம் அறிவித்துள்ளது.

# தேர்த் திருவிழாவில் மடிக்கணினி அன்பளிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 25

சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய தேர் திருவிழாவை ஒட்டி கடந்த திங்கள் வீரமாகாளி அம்பாள் அறப்பணி நிதியத்தாரால் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் வறுமை கோட்டுக்கு உட்பட்டோருக்கான உலர் உணவு பொருள்கள் வழங்கப்பட்டன. இதன்போது கொடையாளி ஒருவர் அறப்பணி நிதியத்தால் மாணவருக்கு வழங்குவதற்கான மடிக் கணினி ஒன்றை ஆலய பரிபாலனச் சபை செயலாளர் வை விஜயகுமாரனிடம் கையளித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச நீதிமன்றில்...

பாராளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் கென்சவேர்ட்டிவ், தொழில் கட்சி மற்றும் பசுமை கட்சிகளின் பிரதிநிதிகள் பிரிட்டனில் முதல் தடவையாக இடம்பெற்ற தமிழ்த் தேர்தல் மேடை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியதுடன் இலங்கையில் இடம்பெற்ற பெரும் அநீதிகளுக்கு நீதி, பொறுப்புக் கூறலை உறுதி செய்வதை நோக்கிய நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக உறுதியளித்துள்ளனர்.

தமிழ் கார்டியன், பிரிட்டிஷ் தமிழ் கூட்டமைப்பு இணைந்து ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு வெஸ்ட்மினிஸ்டரில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட பிரிட்டனின் பிரதான கட்சிகளின் பிரதிநிதிகள் நாட்டுக்கான அவர்களின் தொலைநோக்கையும் பிரிட்டனின் தமிழ் சமூகத்துக்கான தங்களின் பகிரப்பட்ட அர்ப்பணிப்பையும் முன்வைத்தனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை விவகாரத்தை கென்சவேர்ட்டிவ் கட்சி தொடர்ந்தும் எழுப்பும் என அந்தக் கட்சியின் பிரதி வெளிவிவகார அமைச்சர் அன்ரூ மிட்செல் தெரிவித்தார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இலங்கை விவகாரத்தை எழுப்புவது குறித்த கேள்விக்குப் பதிலளித்த அவர் நாங்கள் நிச்சயமாக ஆராய்வோம். இங்குள்ள தமிழ்ச் சமூகத்தினர் அதற்கான அழுத்தங்களைக் கொடுத்தால் நாங்கள் நிச்சயமாக அதனைச் செய்வோம்- என்றார்.

இந்த நிகழ்வில் தடைகள் குறித்தும் ஆராயப்பட்டன.

தடைகள் குறித்து கருத்து தெரிவித்த கென்சவேர்ட்டிவ் கட்சியின் பிரதிவெளிவிவகார அமைச்சர் அன்ரூ மிட்செல் இராஜதந்திர நடவடிக்கைகளின் ஒரு வகையான பதிலே தடைகள் என குறிப்பிட்டதுடன் பிரிட்டன் அதனை பயன்படுத்தலாம் எனத் தெரிவித்தார்.

எனினும், முன்கூட்டியே தடைகள் குறித்து விவாதிப்பது தடைகள் காரணமாக ஏற்படக்கூடிய தாக்கங்களை குறைக்கும் என்பதால் பிரிட்டன் அது குறித்து விவாதிக்க விரும்பவில்லை எனவும் தெரிவித்தார்.

பிரிட்டனின் கொள்கைகள் ஒருநாடு சார்ந்தது அல்ல என தெரிவித்த அவர் மாறாக குற்றங்களை அடிப்படையாக கொண்டவை எனவும் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் இலங்கை அலட்சியம் செய்யப்பட்டுள்ளது என நீங்கள் கருதக்கூடாது என கென்சவேர்ட்டிவ் கட்சியின் பிரதிவெளிவிவகார அமைச்சர் அன்ரூ மிட்செல் தெரிவித்தார்.

கனடா பாராளுமன்றம் மே 18ஆம் திகதியை தமிழ் இனப்படுகொலை தினமாக நினைவுகூருவதைபோல பிரிட்டன் பாராளுமன்றம் தமிழர் இனப்படுகொலை செய்யப்பட்டார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள செய்வதற்கான முயற்சிகளை தீவிரப்படுத்துவீர்களா என்ற கேள்விக்கு பதிலளித்த கென்சவேர்ட்டிவ் கட்சியின் பிரதி வெளிவிவகார அமைச்சர் அன்ரூ மிட்செல்

குறிப்பிட்ட நினைவுநாள் என்பது இல்லை என்றாலும் கொல்லப்பட்டவர்கள் காணாமல்போனவர்கள் மற்றும் அவர்களை தேடும் உறவுகளை தொடர்ந்தும் நினைவுகூருவதாக தெரிவித்தார்.

குறிப்பாக இனப்படுகொலை என்ற சொல் குறித்து மேலும் கேள்வி எழுப்பியபோது யூதர்கள் இனவழிப்பு ருவாண்டா படுகொலை நினைவுகூருவதில் தனது பணியை நினைவுகூர்ந்தார்.

இனப்படுகொலையை தடுத்து நிறுத்துவது குறித்து நான் மிகவும் கவனமாக உள்ளேன். இனப்படுகொலை இடம்பெறுகின்றது என்பதை நீதிமன்றங்களே தீர்மானிக்கின்றன. பேரழிவு, அச்சத்தை ஏற்படுத்திய மோதல் இடம்பெற்றது. இதன்போது, மிகப் பயங்கரமான செயல்கள் இடம்பெற்றதை - அவை பலரை அச்சத்துக்குள்ளாக்கியதை நாங்கள் கண்டோம். இது குறித்து எந்த சந்தேகமும் இல்லை. அதனை மறுக்கவும் முடியாது.

சுயநிர்ணய உரிமை குறித்து கருத்து தெரிவித்த அவர் சுதந்திரத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பு குறித்து வேண்டுகோள்கள் காணப்படுகின்றன. ஆனால், ஓர் அரசாங்க அமைச்சராக நான் மற்றுமொரு நாட்டின் இறையாண்மை முடிவுகளில் ஒரு நிலைப்பாட்டை எடுப்பதில் மிகவும் கவனமாகயிருக்க வேண்டும். நீங்கள் எதிர்பார்க்கும் பதிலை என்னால் கொடுக்க முடியவில்லை. இலங்கைக்குள் நல்லிணக்கத்தை கொண்டுபோய் சேர்ப்பதில் நாங்கள் நல்ல சக்தியாக விளங்க முடியும்- என்றார்.

இதேவேளை, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என தொழில்கட்சியின் ஆசியாவுக்கான நிழல் அமைச்சர் கதெரின் வெஸ்ட் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தை போல இல்லாமல் சர்வதேச சட்டத்தை எங்களின் வெளிவிவகார கொள்கையின் முக்கிய கருப்பொருளாக நாங்கள் பின்பற்றுவோம். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை பாரப்படுத்துவதில் பிரிட்டனின் முக்கிய பங்களிப்பை வழங்க வேண்டும்- என்றார். (எ)

## என்னைக்...

வெடிமருந்துகள் உற்பத்தி செய்தேனா? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும், ஈஸ்டர் தினத்தன்று குண்டுத் தாக்குதல்களை நடத்தியவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைதாகி சிறையிலுள்ள நூற்றுக்கணக்கானவர்கள் தொடர்பில் எவரும் பேசுவதில்லை என்றும் நான்தான் அனைவருக்கும் பிரச்னையாக உள்ளேன் எனவும் அவர் கூறினார்.

அரசாங்கத்துடன் இணைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் சில அரசியல் மூடர்களின் விளையாட்டுகள் இன்னும் இரண்டே மாதங்களில் முடிவடையும். ஜனாதிபதித் தேர்தலில் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக விஜயதாஸ ராஜபக்ஷவை களமிறக்கி வெற்றி வாகை சூடுவோம்.

கண்டியில் நேற்று திங்கட்கிழமை சுதந்திரக் கட்சி தொகுதி அமைப்பாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கட்சி தலைவராக செயல்படுவதற்கே நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. மாறாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அல்ல. எனவே, நாம் எமது வழமையான அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதில் சிக்கல் இல்லை. சில அரசியல் மூடர்களின் விளையாட்டுகள் இன்னும் இரண்டே மாதங்களில் நிறைவடையும். அதன் பின்னர் அவர்கள் எங்கு ஓட்டமெடுப்பார்கள் என்று தெரியாது.

அரசியலில் யாருடைய வாயையும் எம்மால் மூட முடியாது. கட்சி யாப்புக்கு அமைய தற்போது அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுபவர்களுக்கு சுதந்திரக் கட்சியில் எந்த உரிமையும் கிடையாது. எமக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை. தடையுத்தரவும் இடைக்கால தடை உத்தரவும் மாத்திரமே பிறப்பிக்கப்பட்டுள்ளன.

ஊடகங்களும் மக்கள் மத்தியில் சரியான தகவல்களை கொண்டு செல்வதில் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும். யாப்புக்கு அமைய சிறீ லங்கா சுதந்திரக் கட்சி எம்மிடமே உள்ளது என்பதை ஆதரவாளர்களிடம் கூறிக் கொள்கின்றேன் - என்றார். (எ)

# தேர்தலை அடிப்படையாக வைத்து நாடகமாட தயாராகும் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 25

வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு விட்டதாக ஜனாதிபதிக்கோ, பாராளுமன்றத்துக்கோ கூறமுடியாது. கடன் சுமையிலுள்ள நாடுகள் பட்டியலை வெளியிடும் சர்வதேச நிறுவனங்களுக்கே அதனை அறிவிக்க முடியும். தேர்தலை அடிப்படையாகக் கொண்டு நாடகமொன்றை அரங்கேற்றுவதற்கு ஜனாதிபதி முயற்சிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

புதனன்று நாட்டு மக்களுக்கு விசேட அறிவிப்பு கிடைக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கையை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்டுவிட்டதாக ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு அறிவிக்கவுள்ளார். கடந்த ஆண்டு மார்ச் 21ஆம் திகதி ஜனாதிபதி இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இந்த அறிவித்தலின் பின்னரே வட்வரியும் அதிகரிக்கப்பட்டது. எனவே, இம்முறையும் அவ்வாறு ஏதேனும் இடம்பெறுமோ? என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு மார்ச்சில் நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு விட்டதாக அறிவிக்கப்பட்டது. அவ்வாறெனில் இவ்வாண்டில் மீண்டும் எதற்காக அந்த அறிவித்தல் வெளியிடப் படவுள்ளது?

வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு விட்டதாக ஜனாதிபதிக்கோ, பாராளுமன்றத்துக்கோ கூற முடியாது. கடன் சுமையிலுள்ள நாடுகள் பட்டியலை வெளியிடும் மோடிஸ், பிட்ச் ரேட்டிங் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களுக்கே அதனை அறிவிக்க முடியும். அடுத்த மாதம் 17 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை அறிவிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெறும். - என்றார். (எ)

## மன்னாரில்...

சடலம் முருங்கன் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணையை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## எமது அரசாங்கம்...

இதனை நாங்கள் பின்னரே முடிவு செய்வோம். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடம் எம்மிடம் ஏராளமான வேட்பாளர்கள் உள்ளனர் - நாங்கள் முடிவு எடுப்பது சவாலானது", என்றும் அவர் கூறியிருந்தார். (ஐ)

## ரூ. 40 கோடி...

மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் இந்த சந்தேகத்துக்கு இடமான பொதி கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இதன் பெறுமதி சுமார் 40 கோடி ரூபாய் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய 3 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ)

## கல்முனை...

"எமது நியாயமான கோரிக்கைக்கு பதில் என்ன?", என்று கோரி நூற்றுக் கணக்கில் கூடிய மக்கள் வீதியில் அமர்ந்து முன்னெடுத்த போராட்டத்தால் சுமார் 7 மணி நேரம் போக்குவரத்து தடைப்பட்டது. எனினும், மருத்துவ சேவை வாகனங் களுக்கு வழிவிடப்பட்டது. தடைப்பட்ட ஏனைய வாகனங்களை வேறு பாதைகளால் பொலிஸார் அனுப்பி போக்குவரத்தை ஒழுங்குபடுத்தினர்.

இந்தப் போராட்டத்தால் அங்கு அதிகளவான பொலிஸார், இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர். அத்துடன், ஆளில்லா விமானமும் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டது. இந்த நிலையில், போராட்டம் நடைபெற்ற இடத்தில் பெரும் பதற்றநிலை நிலவியது.

காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணியை கடந்தும் தொடர்ந்த போராட்டம் மாவட்ட செயலருடனான சந்திப்பைத் தொடர்ந்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு அதன் அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி 92 நாட்களாக தொடர்ச்சியாக கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

(முன்னர் வந்த செய்தி பக்கம் 8இல்)

## 4 உணவு கையா...

நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது, நல்லூர் பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் தேநீர் சாலை ஒன்றும் வண்ணார்பண்ணை பரிசோதகர் பிரிவில் உணவகம், உணவு உற்பத்திச் சாலை என்பனவும் பெரும் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கியமை பிடிபட்டது.

இதேபோன்று, கடந்த 12ஆம் திகதி நல்லூர் மருத்துவ அதிகாரி பிரிவில் சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் தலைமையிலான குழுவினர் நடத்திய சோதனையில் இரு வெதுப்பகங்கள் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கியமை அவதானிக்கப்பட்டது.

இந்த 5 உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராகவும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகள் நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நீதிவான் ஏ. ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

வழக்கை விசாரித்த நீதிவான், யாழ். மாநகர சபை எல்லைக்குள் இயங்கிய மூன்று உணவு கையாளும் நிலையங்களையும் சீல் வைத்து மூடுமாறு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, கொக்குவிலில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய வெதுப்பகங்களில் ஒன்றை சீல் வைத்து மூடுமாறு உத்தரவிட்ட நீதிவான் மற்றைய வெதுப்பகத்தை திருத்த வேலைகளை உடன் செய்யுமாறும் உத்தரவிட்டு அவற்றின் உரிமையாளர்களை ஆள்பிணையில் விடுத்தார். (ஐ)

## தமிழர்...

பொறிமுறை அடிப்படையில் பொது வேட்பாளரை நிறுத்துவது என்பது தொடர்பிலும், பொது வேட்பாளர் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க குழு ஒன்றை அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிய வருகின்றது.

இந்தக் கூட்டத்தில் ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தம் கருணாகரம் (ஜனா), சுரேந்திரன் குருசுவாமி, புளொட் கட்சியின் சார்பில் வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் ச. சிவநேசன், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயலாளர் நா. ரட்ணலிங்கம், தமிழ்த் தேசியக் கட்சியின் சார்பில் நா. சிறீகாந்தா, ஜனார்த்தனன், ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் சார்பில் அந்தக்கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், செயலாளர் சிவசக்தி ஆனந்தன், ஜனநாயக போராளிகள் கட்சியின் சார்பில் அந்தக் கட்சியின் தலைவர் வேந்தன், பேச்சாளர் துளசி ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# குருந்தூர்மலை, வெடுக்குநாறியில் சுதந்திரமாக வழிபடுவதற்கு வசதி!

## யாழ். வந்த புத்தசாசன அமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம், ஜூன் 25

**யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க நல்லை ஆதீனத்துக்கு விஜயம் செய்ததோடு அங்கு சமயத் தலைவர்களுடன் கலந்துரையாடினார்.**

குருந்தூர்மலை, வெடுக்குநாறி என்பவற்றில் அனைத்து மதத்தவரும் பாரபட்சமின்றி சுதந்திரமாக வழிபட வழி செய்யப்படும் என அவர் இதன்போது கூறினார்.

இதன்போது குருந்தூர்மலை மற்றும் வெடுக்குநாறி மலையில் சைவ மக்கள் சுதந்திரமாக வழிபடுவதற்கு வகை செய்தல், காங்கேசன்துறையில் உள்ள ஆச்சிரமத்தின் காணி விடுவிப்பு, திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய வளாகத்திலுள்ள பெட்டிக் கடைகளை அகற்றுதல் உள்ளிட்ட கோரிக்கைகள் இந்து சமய தலைவர்களினால் முன்வைக்கப்பட்டன.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, குருந்தூர்மலை, வெடுக்குநாறி என்பன தொல்பொருள் திணைக்களக் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பினும் அனைத்து மதத்தவரும் பாரபட்சமின்றி சுதந்திரமாக வழிபட வழிசெய்வதாக உறுதியளித்தார்.

மேலும் திருகோணமலையில் உள்ள சிறு கடைகளை அகற்றல் மற்றும் காங்கேசன்துறையில் உள்ள சைவாச்சிரமத்தின் காணி விடுவிப்பு தொடர்பிலும் பரிசீலிப்பதாக அவர் தெரிவித்தார்.



நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் சிவபூமி அறக்கட்டளை அமைப்பாளர் கலாநிதி ஆறு. திருமுருகன், ரிஷி தொண்டுநாத சுவாமிகள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (அ)

# விஜயதாச நீக்கம்?

கொழும்பு, ஜூன் 25

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவை, பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான யோசனை கட்சியின் உயர்மட்டக் கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுள்ள தாலேயே கட்சி யாப்பின் பிரகாரம் அவருக்கு எதிராக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. (அ)

# 18 வயது இளைஞனின் கை துண்டாடப்பட்டது!

## கிளிநொச்சியில் பயங்கரம்

கிளிநொச்சி, ஜூன் 25

காதல் உறவினால் ஏற்பட்ட பிணக்கினால், இளைஞன் ஒருவரின் கை துண்டாடப்பட்டுள்ளது. காயமடைந்த இளைஞன் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விநாயகபுரம் பகுதியில் குறித்த சம்பவம் நேற்று முன் தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

காதல் பிணக்கு காரணமாக ஏற்பட்ட முரண்பாடு இச்சம்பவத்துக்கு வழியமைத்துள்ளதாக கூறப்படுகிறது.

சம்பவத்தில் விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த செந்தில் குமார் தனுஜன் எனும் 18 வயதுடைய இளைஞனின் கை, மணிக்கட்டுடன் துண்டாடப்பட்டுள்ளது.

காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளைஞன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன. (அ)

# மாமுனையை சேர்ந்த மீனவர் கற்பிட்டிக் கடலில் உயிரிழப்பு

வடமராட்சி, ஜூன் 25



யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு மாமுனையை சேர்ந்த இளைஞன் ஒருவர் கற்பிட்டி பகுதியில் மரணமடைந்துள்ளார்.


வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதியிலிருந்து புத்தளம் கற்பிட்டிப் பகுதிக்கு கடற்றொழிலுக்காகச் சென்றவேளை அவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலைவரை கரை திரும்பாத நிலையில் மீனவர்களால் தேடுதல் நடத்தப்பட்டபோது சடலம் மீட்கப்பட்டுள்ளது. தற்போது சடலம் கற்பிட்டி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் வடமராட்சி கிழக்கு, மாமுனை பகுதியை சேர்ந்த டிசாந்தன் பெர்னான்டோ என்ற 26 வயதுடைய இளைஞரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

வீசிய கடுமையான காற்றின் காரணமாக ஏதாவது விபத்து இடம் பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

இவர் கற்பிட்டியைச் சொந்த இடமாக கொண்டவர் என்றும், மாமுனையில் திருமணமாகி வசித்து வந்திருந்த நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாமுனையிலிருந்து கற்பிட்டிக்கு கடற்றொழிலிற்காகச் சென்றிருந்தார். (அ-2)

# வியாழேந்திரனுக்கு நேற்று மேலதிகமாக ஒரு அமைச்சு!



கொழும்பு, ஜூன் 25

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மேலதிகமாக வர்த்தக மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சராகவும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்றுக் காலை அவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

குறித்த சத்தியப் பிரமாண நிகழ்வு, ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஏற்கனவே சதாசிவம் வியாழேந்திரன் வர்த்தக இராஜாங்க அமைச்சராக பதவி வகித்துவரும் நிலையிலேயே, மேலதிகமாக மற்றுமொரு இராஜாங்க அமைச்சு பதவி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடன் மறுசீரமைப்பு உடன்பாடு நாளை!

கொழும்பு, ஜூன் 25

பரிஸ் கிளப் மற்றும் சீனா ஆகிய தரப்புகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை நாளை புதன்கிழமை கைச்சாத்திடப்படவுள்ளது.

அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் இந்தத் தகவலை வழங்கினார்.

சர்வதேச நாணய நிதியம் அண்மையில் அறிவுறுத்தியிருந்ததற்கு அமைவாக இந்த உடன்படிக்கை கைச்சாத்தாகவுள்ளது.

இதன்கீழ் இலங்கை தமது கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு 6 ஆண்டுக்கால அவகாசம் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# பழ நுகர்வு இலங்கையில் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 25

**2023 ஆம் ஆண்டில் இலங்கையில் பழ நுகர்வு 12.8 மில்லியன் மெட்ரிக் தொன்களாக (1,283,039 மெற்றிக் தொன்) அதிகரித்துள்ளது என விவசாயத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இந்நாட்டின் வருடாந்தப் பழங்களின் தேவை 19.6 மில்லியன் மெட்ரிக் தொன்களாகும். (196,9371 மெற்றிக் தொன்). 2023ஆம் ஆண்டு பழ உற்பத்தி அதிகரிப்பைப் பார்க்கும் போது வாழை, மா, அன்னாசி, பப்பாளி போன்றவற்றின் உற்பத்தி அதிகரித்துள்ளது என விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தவிர, 2023 ஆம் ஆண்டில் பழங்களின் ஏற்றுமதியும் அதிகரித்துள்ளது. அதன்படி, 38,201 மெற்றிக் தொன் பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

2027-ம் ஆண்டுக்குள் வாழை உற்பத்தி ஹெக்டேருக்கு 19.5 மெற்றிக் தொன்னாகவும், மா உற்பத்தியை 9.5 மெற்றிக் தொன்னாகவும், பப்பாளி 45 மெற்றிக் தொன்னாகவும், அன்னாசி 14 மெற்றிக் தொன்னாகவும்,

කෘෂිකර්ම දෙපාර්තමේන්තුව
விவசாயத் திணைக்களம்
Department of Agriculture

ஆரஞ்சு பழத்தை 30 மெற்றிக் தொன்னாகவும் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

இரக இனப் பெருக்கம், கலப்பின இரகப் பெருக்கம், அதிக அடர்த்தி கொண்ட பயிர்ச்செய்கை, ஒருங்கிணைந்த பூச்சிக் கட்டுப்பாடு, தாவர ஊட்டச் சத்து அறிமுகம், பயிர் சேதத்தைக் குறைத்தல், அறிமுகப்படுத்துதல் போன்ற பல தொழில்நுட்ப நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன என விவசாயத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் கலாநிதி கமனி ரணதுங்க தெரிவித்தார். (அ)

# ஓ.எல். பெறுபேறு 10 நாள்களில்!

கொழும்பு, ஜூன் 25

**2023 (2024) ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகள் 10 நாட்களுக்குள் வெளியிடப்படும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.**

இந்த வாரத்திற்குள் பெறுபேறுகளை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், அவ்வாறு இல்லையெனில் 10 நாட்களுக்குள் பெறுபேறுகள் வெளியிடப்படும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

சாதாரண தரப் பரீட்சைகள் கடந்த மார்ச் மாதம் நடைபெற்றது. அதில் 452,979 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றினர். அவர்களில் 387,648 பேர் பாடசாலை பரீட்சார்த்திகள், 65,331 பேர் தனியார் விண்ணப்பதாரர்கள். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.